Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 1389

மலர் 13
இதழ் 2
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 30 ஜுஹஜ் 15 வெள்ளிக்கிழமை (12-2-71)

அருந்துங்கள்!
அண்ணா
கோப்பி
அண்ணா தொழிற்சாலை
இணுவில்

## புதிய அரசியல் அமைப்புக்குமுன்

# கருத்து வேறுபாடுகள் யாவும் ஆராயப்படும்

## வழிகாட்டுக்குழுவில் கொல்வின்

### ஐவர் கொண்ட உப-குழு நியமனம்

-- பெரி. சுந்தரலிங்கம் .--

கொழும்பு, வியாழன் அரசியல் அமைப்பு வழிகாட்டுக்குழுவுக்குப்பல பிரேரணைகள் பல நிறுவனங்களாலும் நபர்களாலும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அரசியல் திட்ட விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வா இன்று நடைபெற்ற வழிகாட்டுக்குழுவில் தெரிவித்தார் மக்களாலும் நிறுவனங்களாலும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள பல பிரேரணைகள் சில ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் சிலஏற்றுக்கொள்ள முடியாததாகவும் இருப்பதால் ஏற்றுக்கொள்ளமுடியாதவை என்றுகருதப்படும் விஷயங்களை ஆராய்ந்து அவை பற்றி வழிகாட்டுக் குழுவிற்குச் சிபார்சு செய்வதற்கு ஐவர் கொண்ட உப-குழு தெரிவுசெய்யப்பட்டது இந்த உப-குழுவில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன, திரு. டட்லி சேனநாயக்கா தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ், ஜே வி. செல்வநாயகம் யாழ்ப்பாணம் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு சி. எக்ஸ் மார்ட்டின் அரசியல் திட்ட விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா ஆகியோரே இவ்வுபகுழுவில் அங்கம் வகுப்போராவர்.

வழிகாட்டுக் குழுவில் அமைச்சர் கொல்வின் ஆர். டி சில்வா பேசுகையில், வழிகாட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ள சகல பிரேரணைகள் ஒவ்வொன்றும் மிகக் கவனமாக ஆராயப்படும். இப்பிரேரணைகள் யாவும் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்படும். புதிய அரசியல் அமைப்பு ஏற்படுவதற்கு முன், இது பற்றி ஏற்படக் கூடிய கருத்து வேறுபாடுகள் யாவும் மிகக் கவனமாகவும் கூர்மையாகவும் ஆராயப்படுமென்றார்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள உபகுழு இம் மாதம் 15-ம் திகதி ஆட்சி மன்றத்தில் கூடும், இம் மாதம் 20-ம் திகதி அரசியல் நிர்ணய சபையும், வழிபாட்டுக் குழுவும் கூடும்.

செனட்டில்

## சேமலாபநிதி திருத்தச் சட்ட மூலம் நிறைவேறியது

கோட்டை, வியா ஊழியர் சேமலாப நிதி திருத்த சட்டம் மூலச் இன்று செனட்சபையில் நிறைவேறியது. இந்தத் திருத்தச் சட்ட மூலவாசிப்பை ஒட்டி தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் பேசுகையில், ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்காகவே இத் திருத்தச் சட்ட மூலத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் இச் சட்டத்தின் பிரகாரம் தொழிலாளர் இதுவரை காலமும் செலுத்தி வந்த 4 வீதம் 6 வீதமாகவும், தொழில் வழங்குவோர் அளித்து வந்த 6 வீதத்தை 9 வீதமாகவும் அதிகரிக்கப் பட்டுள்ளது என்றார்.

செனட்சபை எதிர் கட்சித் தலைவர் திரு விஜயமன பேசுகையில், ஊழியர்களிடமிருந்து எவ்வளவு தொகை கழிக்கப்படுகிறதென்பதை அவர்களுக்கு அறிவிக்க வேண்டுமென்றார்.

பாக் வர்த்தக விமானங்களை

## சர்வதேச போக்குவரத்து சம்மேளனம் பகிஸ்கரிக்கும்?

புதுடில்லி, பெப். 11 இஸ்லாமபாத்திலுள்ள இந்திய தூதரகத்தின்முன் நடைபெற்ற வண்முறைச் சம்பவங்கள் பற்றி இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது

இஸ்லாமாபாத்திலுள்ள இந்திய தூதரகஅதிகாரிகள் இருவரின் இல்லங்களுக்குள் சென்று சிலர் சேதம் விளைவித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது இதற்குரிய கண்டனக் குறிப்பொன்றை புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் இந்திய அரசாங்கம் கொடுத்துள்ளது.

லாகூரில் அழிக்கப்பட்ட இந்திய விமானத்திற்குப் பாகிஸ்தான் நஷ்டஈடு வழங்காவிட்டால் பாகிஸ்தான் வர்த்தகவிமானங்களை உலகம் முழுவதிலும்பகிஸ்கரிக்கப் போவதாக சர்வதேச போக்குவரத்துச் சம்மேளனம் தெரிவித்துள்ளதாக பம்பாய் தொழிற் சங்கப் பிரமுகர் குல்கர்னி தெரிவித்துள்ளார். இது பற்றிய செய்தியை சர்வதேச போக்குவரத்துச் சம்மேளனம் லண்டனிலுள்ள பாகிஸ்தான் தூதரிடம் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## 'நான்கு மாதத்திற்குள் உரிமைபெற வேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி தமிழினத்தின் நிலைமை என்றுமில்லாதவாறு மிகவும் மோசமடைந்துள்ளது. இன்னும் நான்கு மாதங்களுக்குள், தமிழினத்திற்கு செய்யக்கூடிய நன்மைகளை எவராக இருந்தாலும் செய்யாவிடின் எதிர்காலத்தில் இந்நாட்டில் தமிழினம் அழிந்துவிடக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். சட்டம் இயற்றப்படு முன்தான் நமது ஆட்சேபத்தை தெரிவித்து ஏதாவது நன்மை பெறமுடியும். சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் எதுவுமே செய்ய முடியாது.

தமிழர் ஒற்றுமை முன்னணி நடவடிக்கை குழு உறுப்பினரும் சாவகச்சேரி எம் பி யுமான திரு வி என் நவரத்தினம் நமது நிருபரிடம் மேற்கண்டவாறு நேற்று கூறினார்.

திரு நவரத்தினம் மேலும் தெரிவித்ததாவது: இலங்கையில் தற்பொழுது தமிழருக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலையில் சில சமயம் எனது வெளிநாட்டு பயணத்தை கைவிடவேண்டிய நிலைமை ஏற்படலாம். தமிழினத்திற்கு என் கடமையை செய்யவேண்டியிருக்கிறது. பிரித்தானியாவில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் கலந்துகொள்வது பற்றி இன்னும் நான் முடிவு செய்யவில்லை.

இந்த நாட்டில் சிங்களவருக்குள்ள அத்தனை உரிமைகளும் தமிழருக்கும் இருக்க வேண்டும் தமிழர் இந் நாட்டில் இரண்டாந்தர பிரஜையாக வாழச்சம்மதிக்க மாட்டார்கள் எமது உரிமைகளை நாம் கேட்பது எவ்விதத்திலும் தவறாகாது

புதிய அரசியல் கூட்டம் உருவாக்கப்படும்போது, நமது உரிமைகளை தமிழ் கட்சிகள் எல்லாம் சேர்த்து முன்வைத்திருக்கிறோம், இந்த குறைந்தபட்ச உரிமைகளையே அரசாங்கம் தர மறுக்குமானால், இந்த அரசாங்கத்திடம் வேறு எந்த தியாகத்தையும் சிறுபான்மைச் சமுகத்தவர் எதிர்பார்க்க முடியாது.

இந்த நாட்டில் உள்ள தமிழர் இந்த 9 அம்சத் திட்டத்திற்கும் குறைந்தளவு எந்த உரிமையும் பெற்று தன்மானத்துடன் வாழ முடியாதென்பதை தமிழ் மக்கள் மறந்துவிடக் கூடாது. (கு விம)

## 'பே' வில்லை என்பதை நிரூபிப்பேன்'

யாழ்ப்பாணம், வியா. வல்வெட்டித்துறையில் தமிழ்க் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடந்த அதே தினம் இணுவிலில் தமிழரசுக்கட்சிக் கூட்டம் நடைபெறவில்லை. அங்கு தமிழ் விழாதான் நடந்தது. அக் கூட்டத்தில் எம். பிக்கள் எவரும் பேசவில்லை. இலக்கியம் பற்றி அங்கு பேசினேன், தமிழ் காங்கிரஸ் எம் பிக்களை தாக்கிப் பேசவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

இணுவில் கூட்டத்தில் தங்களை தாக்கிப் பேசியதாக நல்லூர் எம். பி. வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளிக்கையில் தமிழரசு உபசெயலாளர் திரு. எம். ஆலாலசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ஆலாலசுந்தரம் மேலும் கூறியதாவது: கம்பன், பாரதி, அண்ணா, இளங்கோ, பாரதிதாசன் முதலியோர் பற்றிப்பேச வேண்டிய தமிழ் விழாவில் அருளம்பலம், தியாகராசா பற்றி பேசுவதற்கு நான் இலக்கியம் தெரியாதவனல்ல.

அக் கூட்டத்தில் நான் தமிழ் காங்கிரஸ் எம், பிக்களை தாக்கிப் பேசவில்லை என்பதை நிரூபிக்க தயாராக இருக்கிறேன். அன்று 3 கூட்டங்களில் பேசியிருக்கிறேன். இணுவில் தமிழ் விழாவும், தாவடியில் கலை விழாவும், கோப்பாயில் அண்ணா விழாவும் நடந்தது, தமிழரசுக் கூட்டம் அன்று நடைபெறவேயில்லை.

தமிழ் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொள்ளாத குற்றத்தை மறைப்பதற்கு நல்லூர் எம். பி. இப்படி சிறுபிள்ளைத்தனமாக நடந்து வருகிறார் போலும்.

## வடக்கில் மண் பரிசோதனை

யாழ்ப்பாணம், வெள்ளி வயற்காணி மண்ணையும் தோட்டக்காணி மண்ணையும் பரிசோதித்து நிலத்தின் தன்மைக்கமைய விவசாய விருத்தியை விளக்குவிக்கும் திட்டமொன்று வடபகுதி காரியாதிகாரியால் செயற்படுத்தப்படவுள்ளது

மண்ணின் வளத்தையும் அதன் குறைபாடுகளையும் அறியவும் தென்மராட்சிப் பகுதியிலிருந்து பரிசோதனைக்கு மண் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தென்மராட்சிக் காரியாதிகாரி உட்பட வடபகுதியிலுள்ள காரியாதிகாரிகள் வடமாகாண அரசாங்க அதிபரை மண் பரிசோதனை விடயமாகப் பொதுமக்களுக்கு உதவவேண்டுமெனக் கேட்டுள்ளனர். (கு வி.ம.)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வளவு

அராலி மேற்கு குழக்கன் ஒழுங்கையில் அமைந்துள்ள பனையுடன் 6 பரப்பு வளவு உடன் விற்பனைக்குண்டு நா. அன்னப்பிள்ளை வட்டுக் கிழக்கு வட்டுக்கோட்டை. 2819

நல்லூரில் எட்டு அறைகளுள்ள புதிய வீடும் மூன்று பரப்புக்காணியும் மூப்பத்தையாயிரம் கடனுமுண்டு. ஒன்பது பரப்புக்காணி முழுவதும் இருபத்தேழாயிரம், துண்டுகளாகவும் வாங்கலாம் உரிமையாளரின் விலாசம்: 92, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. 2817

### இனாம்

ஸ்ரார் நீலசோப் 25 மேலுறைகளை அனுப்பி ஒரு போல் பொயின்ட் பேனையை இனாமாகப் பெற்றுக்கொள்ளுங்கள் ஞானம் இன்டஸ்றியல்வேக்ஸ், பருத்தித்துறை 2820

### வெளியாகின

அம்பன் வெள்ளி 1969ம் ஆண்டில் நடைபெற்ற தபாற்தந்தியாளர் பரீட்சைக்கான பெறுபேறுகள் சில தினங்களுக்கு முன்னர் வெளியாகியுள்ளது.


## மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்
## கேள்விப் பத்திர அறிவித்தல்

முத்திரைச் சந்தையிலிருக்கும் கடை அறைக்குத்தகை—1971

மேற்படி சந்தையிலிருக்கும் கடை அறையை 1971ம் ஆண்டு பங்குனிமாதம் 1-ம் திகதி தொடக்கம் 1975ம் ஆண்டு மார்கழி மாதம் 31ம் திகதிவரையும் குத்தகைக்குக் கொடுக்கும்முகமாக கேள்விப்பத்திரங்கள், யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 1971-ம் ஆண்டு மாசி மாதம் 19ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இதுசம்பந்தமாக மேலதிக விபரங்கள் அறிய விரும்புவோர் மாநகர ஆணையாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
10-2-71 2772

நெடுங்கேணி, வெள்ளி

வவுனியா மாவட்டத்தில் கடந்த வருடத்திலும் பார்க்க, இவ் வருடம் மிளகாய்ச் செய்கையை பத்து வீதம் அதிகரிக்க வவுனியா மாவட்ட விவசாய இலாகா திட்டமிட்டிருக்கிறது.

## நூல் இறக்குமதியை அரசு மேற்கொள்ளும்

கோட்டை வியாழன்

நெசவுக் கைத்தொழிலுக்குத் தேவையான இறக்குமதியை தனியார்துறையினரிடமிருந்து சிறு கைத்தொழில் இலாகா எடுத்துள்ளது.

தொடர்பாகத் தேவைக்குத் தங்களுக்கு நூல் கிடைக்கவில்லையென நெசவாளர்கள் புகார் செய்ததைத் தொடர்ந்தே சிறு கைத்தொழில்இலாகா நூல் இறக்குமதியைத் தான் பொறுப்பேற்றுள்ளது.

பல தடவை நூல் இறக்குமதி தடைப்பட்டதால் கடந்த மாதம் 75,000 கைத்தறிகள் இயங்காது கிடந்தன என மேற்படி இலாகா தெரிவித்துள்ளது

—

## சாரணர் பயிற்சிமுகாம்

சுழிபுரம், வெள்ளி

யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் வலி-மேற்குக் கிளையின் அணி தலைவர்களின் பயிற்சி முகாம் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் உதவி ஆணையாளர் திரு. ஆர். விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது.

முகாமை ஆரம்பித்து வைத்து மேற்படி கல்லூரி அதிபர் திரு. என். சிவஞானம் தன்னம்பிக்கையுடன் நாட்டின் நல்ல பிரசைகளாக வாழ்வதற்கு இந்த இயக்கம் வழிகாட்டுகிறது என்று கூறினார்.

—

### நீர்ப்பாச்சல் சேவகர்

பாண்டிருப்பு புதன்

கல்முனைக் கண்டத்துபயிர்செய்கை குழு புதுவருடத்துக்கான நீர்ப்பாய்ச்சல் சேவகர் பதவிக்கான விண்ணப்பங்களை கோரியிருக்கின்றது புதியபோக ஆரம்ப வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

## 15 வருட பொருளாதார திட்டம்

கோட்டை, வியாழன்

மக்களை வாட்டி வதைக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கமாக அரசாங்கம் 15 வருட பொருளாதாரத் திட்டமொன்றைத் தயாரிப்பது குறித்து ஆராய்ந்துவருகிறது என நிதியமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரிமாவட்ட சமசமாஜக் கட்சி இளைஞர் கூட்டத்தில் பேசுகையிலேயே டாக்டர் பெரேரா மேற்கண்டதகவலை வெளியிட்டார்.

—

## தீர்மானம்

புலோலி, வியாழன்

பருத்தித்துறை தமிழரசு வாலிப முன்னணி நேற்று முன்தினம் திரு சிவா இருஷ்ணமூர்த்தி தலைமையில் கூடிய பொழுது சாதாரண மக்களினது அத்தியாவசியப் பாவனைப் பொருட்களின் விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராட வேண்டுமென்றும் பருத்தித்துறை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு க. துரைரத்தினம் போராட்டத்துக்குத் தலைமைதாங்க வேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பருத்தித்துறை, வடமராட்சிப் பகுதிகளில் உள்ள உணவுப் பண்டகசாலைகளில் மா, அரிசி, போன்ற பொருட்கள் வெளிமாகாணங்களுக்குச் சில வாரங்களாக கொண்டு செல்வது பற்றியும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. கூட்டம் சம்பந்தமான தீர்மானங்கள் தலைமைப் பீடத்திற்கும் பொதுச் செயலாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

விலை உச்சவரம்பைஎதிர்த்துப் பிரசாரக் கூட்டங்களும் ஒழுங்கு செய்யும்படி கட்சியைக் கேட்டுக்கொள்ளவும் முடிவுசெய்யப்பட்டது

—

## ஓய்வுபெற்ற அதிபருக்கு மாணவர் விருந்து

மாவிட்டபுரம், வியா.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் 25 வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள திரு தெ. து ஜெயரத்தினத்திற்குவிருந்துபசாரம் வழங்க உயர்தர வகுப்பு மாணவர்கள் முடிவுசெய்துள்ளனர்.

மாணவர் மன்றத் தலைவர் எஸ் செல்வக்குமார் தலைமையில் இவ்விருந்துபசாரம் நடைபெறும்.

## யாழ். மாநகரசபை வளவுக்குள் மாநகர சபையின் புதிய காரியாலயக் கட்டிடத்தின் இரண்டாவதுகட்டடத்தை நிர்மாணிப்பதற்கான கேள்விப்பத்திர அறிவித்தல்

யாழ். மாநகரசபை ஆணையாளரால் 28-2-1971ந் தேதி பகல் 12 மணிவரை யாழ்ப்பாணத்தில் புதிய காரியாலயக் கட்டடத்தைக் கட்டுவதற்குக் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்

2 28-2-71ந் தேதியன்று மாநகரசபை ஆணையாளர் காரியாலயத்தில் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் பிரசன்னமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுவர்

3 கேள்விகள் யாழ்ப்பாண மாநரசபைத் தொழிற்பகுதிப் பொறியியலாளரிடம் இருந்து பெறும் விண்ணப்பப் பத்திரங்களில் அனுப்பப்பட வேண்டும்.

ரூபா 200/- கேள்வி வைப்புப் பணமாகவும். ரூபா 25/- திருப்பிக் கொடுக்கப்படாத கேள்விப் பத்திரச் செலவுப் பணமாகவும் செலுத்திப் பெறும் படிவத்தில் கேள்விகள் 18-2-1971ந் தேதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி வைப்புப் பணமான ரூபா 200/- தெரிவுசெய்யப்பட்டகேள்விதாரர் வேண்டிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டபின் திருப்பிக் கொடுக்கப்படும்.

4. எல்லாக் கேள்விகளும் இணைப்பிரதியுடன் அரசு முத்திரையிடப்படல் வேண்டும். காகித உறையில்இடது பக்கமேல் மூலையில் புதிய காரியாலய கட்டிடத்திற்கானகேள்விகள் எனக்குறித்தல் வேண்டும்.

5 ரூபா (100,000) ஒரு லட்சத்திற்கு குறையாமல் மாநரசபையில் அல்லது பொதுவேலைஸ்தலத்தில் அல்லது பதிவு செய்ததை நிரூபிக்கவர்களுக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்படும்.

6. மற்றும் விபரங்கள் நிபந்தனைகள் தொழிற் பகுதி பொறியியலாளரிடம் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

A. T. சுந்தரம்
மாநகரசபை ஆணையாளர்
யாழ் மாநகரசபை

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
11-2-71 2773


ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா
நடித்த
**எங்கிருந்தோ வந்தாள்**

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ராஜன் - வாணிஸ்ரீ - சோ
சிவகுமார்-குமாரி லட்சுமி
நடித்த
**அன்னையும் பிதாவும்**

5-வது வாரம
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (கொழும்பு)

சிவாஜி
காஞ்சனா
எம். என்.
நம்பியார்
நாகேஷ்
மூத்துராமன்
இன்னும் பலர் நடித்த





**சிவந்த மண்**

சுன்னாகம்
**நாகப்ஸ சினிமா**
தினசரி 6-30, 9-30
ஜெமினி - சாவித்திரி
நடித்த
**கொஞ்சும் சலங்கை**
(புதிய கொப்பி - கலர்)

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 3-30
சிவாஜி - சௌகார்ஜானகி
நடித்த
**மகாகவி காளிதாஸ்**

இன்று மட்டும்
**வெலஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 2 30, 6-30, 9-30
ஸ்ரீராம் - வீரப்பா - ருக்மனி
நடித்த
**முல்லைவனம்**

RAJAH Jaffna
Daily 3 Shows
Giuliano Gemma
in
BLOW HOT, BLOW COLD
(Color - Adults)

REGAL Jaffna
Daily 3 shows
Poya days 10-30 a m
Frederick Stafford
Dany Robin
in
TOPAZ
(adults only)

MANOHARA
Jaffna
Daily 3 Shows
THE LAST OF
SECRET AGENT
(Spy Film in Color)

**ஸ்கிறிபிலிங் புளக்ஸ்**
**(SCRIBBLING BLOCKS)**

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு உபயோகிக்கக்கூடிய
ஸ்கிறிபிலிங் புளக்ஸ்
(200 தாள்கள் கொண்டவை)

கீழ்க்காணும் விலையில் விற்பனைக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| 1-ம் நம்பர் | 8 1/2'' | X 11'' | ரூ. 2-25 சதம் |
| 2-ம் '' | 7'' | X 10'' | ரூ. 1-75 '' |
| 3-ம் '' | 7'' | X 8 1/2'' | ரூ. 1-50 '' |
| 4-ம் '' | 5'' | X 8 1/2'' | ரூ. 1-25 '' |
| 5-ம் '' | 4'' | X 5 1/2'' | 75 '' |

மொத்தமாக எடுக்கும் வியாபாரிகளுக்கு கழிவுண்டு

**ஈழநாடு**
வர்த்தக அச்சகப்பகுதி
சிவன்கோவில் மேலு வீதி, யாழ்ப்பாணம்.

# இந்தோசீன பற்றிய ஆஸிய மாநாட்டுக்கு யு.எஸ். சம்மதம்

## அமெரிக்க வெளி உறவு அமைச்சர் தகவல்

வாஷிங்டன், பெப். 11

ஆசியநாடுகளின் மாநாடு ஒன்றை நடத்த வேண்டும் என்ற யோசனையை அமெரிக்க அரசாங்கம் ஆதரிக்கும்.

இந்தோ சீனுவில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைப்பற்றி கருத்துப்பரிமாறி பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்று அமெரிக்க செனட்டர் ஒருவர் யோசனை தெரிவித்திருக்கிறார் இந்தயோசனையை அமெரிக்க அரசாங்கம் ஆதரிக்கத்தயாராய் இருக்கின்றது என்று அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு ரோஜர்ஸ் தெரிவித்திருக்கிறார்

வாஷிங்டன் நிருபர்கள் மகாநாட்டில் திரு ரோஜர்ஸ் பேசினார். இரண்டுதரப்பினரையும் சந்திக்கச் செய்யும் எந்த முயற்சிக்கும் அமெரிக்கா ஆதரவளிக்கும் என்று ரோஜர்ஸ் தெரிவித்தார்

இந்தோசீன சம்பந்தமாக ஜெனிவா மாநாட்டை மீண்டும் கூட்டுவதாக இது இருக்கவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

வியட்னாமுக்குள் இருக்கும் அமெரிக்கத்துருப்புகள் மே மாத முடிவுக்குள் வெளியில்வந்து விடுவார்கள்என்று அவ குறிப்பிட்டார்.

இதேசமயம்சுமார் 8 ஆயிரம் தென்வியட்னாமியத் துருப்புகள் லாவோசுக்குள் நுழைந்திருப்பதாக அறிவித்துள்ளனர்.

சுமார் 33 அமெரிக்கதென் வியட்னாம் ஹெலிகொப்டர்கள் சுட்டுவீழ்த்தப்பட்டுவிட்டதாக கம்யூனிஸ்ட்டுக்கள் தெரிவித்துள்ளனர்.

தென் லாவோஸ் பிரதேசத்தில் ஹோசிமின்பாதையைத் துண்டித்து விடுவதற்காக முன்னேறி வரும்தென் வியட்னாம் படைகள்மீது பதாலாவேற்படைகள் எதிர்த்தாக்குதல் ஒன்றினை ஆரம்பித்திருக்கின்றன, காலநிலை சில தினங்களாகமோசமாக இருந்த போதிலும் போர் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

### அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

லாவோசுக்குள் தென் வியட்னமியர் அமெரிக்க ஹெலிகொப்டர்படையின் ஆதரவுடன் ஊடுருவியிருப்பது குறித்து அமெரிக்காவில் பெரியநகரங்கள் பலவற்றில் பெரும் ஆர்ப்பாட்டங்கள்நடைபெற்றுள்ளன. கலிபோர்னியா, பால்டிமோர் ஆகிய நகரங்களில் பெரும் ஆர்பாட்டங்கள் இடம் பெற்றன. ஆனல் ஆர்ப்பாட்டங்கள் யாவும் அமைதியாக நடைபெற்றதாகப் பொலிசார் கூறினார்கள். லொஸ் ஏஞ்சலஸ்நகரில் ஒரு கல்லூரி கட்டிடத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆக்கிரமித்துக்கொண்டுவிட மறுத்தார்கள் பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்து அவர்களை வெளியேற்றினார்கள்.

## யூகோஸ்லாவிய ராஜதந்திரி கடத்தப்பட்டார்

ஸ்டாக்கோம், பெப். 11

சுவிடனிலுள்ள யூகோஸ்லாவிய தூதரகத்தின் கான்சல ஜெனரலை ஆயுதம் தாங்கிய இருவர் கடத்திச் சென்றுள்ளார்கள்.

யூகோஸ்லாவியாவில்சிறைவைக்கப்பட்டுள்ள தீவிரவாதிகளை விடுதலைசெய்ய வேண்டும் என்று கான்சல் ஜெனரலைக்கடத்திச் சென்றவர்கள் கோரியிருக்கிறார்கள்.

ஆனல் இந்தக் கோரிக்கைபற்றி யூகோஸ்லாவியா அக்கறை காட்டவில்லை. கான்சல் ஜெனரல் கடத்திச் செல்லப்பட்டிருப்பது குறித்து யூகோஸ்லாவியா சுவிடனுக்கு குறிப்பொன்றை அனுப்பியிருக்கின்றது.

## நெருப் போடு விளையாடாதீர்!

### அமெரிக்காவுக்கு பீகிங் எச்சரிக்கை

ஹாங்காங், பெப். 11

"இந்தோசீனுவில் நெருப்போடு விளையாடவேண்டாம்" என்று செஞ்சீன அமெரிக்காவை எச்சரித்துள்ளது.

தென்வியட்னும் படைகள் லாவோசுக்குள் மேலும் அதிகத் தூரம் நுழைந்துவிட்டிருப்பதாக செய்திகள் வெளிவந்த அதே சமயம் கம்யூனிஸ்ட் சீனுவின் அதிகாரபூர்வமான மக்கள் தினசரி அமெரிக்காவைக் கண்டிக்கு இந்தக் கருத்தை வெளியிட்டது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் தென்லாவோசுக்குள் ஏராளமான தனது துருப்புகளையும் தென்வியட்னும் தாய்லாந்து படைகளையும் ஏவிவிட்டிருக்கின்றது. கம்போடியாவுக்குள்ளும் மேலும் அதிக சைகோன் படைகளை ஏவிவிட்டிருக்கின்றது. இதன்மூலம் வடவியட்னும்மீது திடீர் தாக்குதல் ஒன்றை நடத்த அமெரிக்கா திட்டமிடுகின்றது.

அமெரிக்காவின் இந்த ஏகாதிபத்திய நடவடிக்கை இந்தோசீனுவில் அதன் ஆக்கிரமிப்பை மேலும் இறுக்கமாக்கிக்கொள்வதற்கான படுமோசமான நடவடிக்கையாகும் என்று மக்கள் தினசரி கண்டித்துள்ளது.

மக்கள் தினசரி தனது கட்டுரையில் மேலும் பின்வருமாறு எச்சரிக்கின்றது நெருப்போடு விளையாடிக் கொண்டிருக்கும் இவர்களுக்கு எமது பெருந்தலைவர் மாசேதுங் எச்சரிக்கின்றார். "கவனமாய் இருந்து கொள்ளுங்கள். இந்த நெருப்பு விளையாட்டுப் பொருளல்ல. உங்கள் சரிமங்களையே அதுசுட்டெரித்துவிடும் கவனம்" என்று வடவியட்னமுக்கு விஜயம் செய்திருந்த கம்போடியாவின் வெளியேற்றப்பட்ட தலைவர் இளவரசர் சிகானுக் பீகிங் திரும்பியதைத் தொடர்ந்த இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## இரத்தக்கசிவை நிறுத்தும் குளிகை

லண்டன், பெப். 11

மூக்கினுல் ஏற்படும் இரத்தக கசிவை நிறுத்தும் ஒரு புதிய முறை சமீபத்தில் உலகமருத்துவம் என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருந்தது. உயர்ந்த இரத்த அழுத்தம் போன்ற பல காரணங்களுக்காக, நாசியில் பலருக்கு இரத்தம் கசிவதுண்டு. ஆனல் பரம்பரையாக சிலருக்கு இருக்கும் வியாதியால் மூக்கிலிருந்து கசியும் இரத்தத்தை நிறுத்தவே முடியாது.

இப்படிப்பட்ட நோயாளிகள் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரத்தக் கசிவு தானுகவே நிற்கும் வரை இரத்தம் ஏற்றப்படுகிறது. ஆனல் இன்றைய விஞ்ஞானிகள் இதற்கு ஒரு சுலபமான முடிவைக் கண்டுபிடிக்கிறார்கள். அது தான் குடும்பக் கட்டுப்பாட்டுக் குளிகை.

இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுக் குளிகையை மூக்கில் இரத்தம் கசியும் நோயாளி உட்கொண்டவுடன், இரத்தக்கசிவு உடனடியாக நின்றுவிடுகிறது என்ற உண்மையை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் தற்போது ஆராய்ச்சி செய்து அறிந்திருக்கிறார்கள்.

## இன்று சீட்டிழுப்பு

கொழும்பு, சனி

தேசியலொத்தர்சபையின் 335 வது சீட்டிழுப்பு இன்று மாலை கொழும்பிலுள்ள தேசிய லொத்தர் சபைக் காரியாலத்தில்நடைபெறும்

பரிசு பெறும் டிக்கட்டுகளுக்கு 19ம் திகதி மேற்படி காரியாலயத்தில் வைத்துபரிசுத்தொகை வழங்கப்படும்.

## 26 அமைச்சர்கள்பங்குபற்றும் சாம்ராஜ்ய கல்வி மகாநாடு

லண்டன், பெப். 11

சிங்கப்பூரில் நடைபெற்ற சாம்ராஜ்ய பிரதம மந்திரிகள் மகாநாட்டை அடுத்து இப்பொழுது அவுஸ்திரேலியாவின் தலைநகரான கன்பராவில் சாம்ராஜ்ய கல்வி மகாநாடு ஒன்று நடைபெற்று வருகிறது இலங்கை உட்பட சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த 26 கல்வி மந்திரிகள் இம்மாநாட்டில் பங்குபற்றி வருகிறார்கள். இம்மாதம் 3ம்திகதி ஆரம்பமாகிய இம்மாநாடு பெப்ரவரி 17ம் திகதிவரையும் தொடர்ந்து நடைபெறும். இலங்கையின் சார்பில் இலங்கையின் கல்வி அமைச்சர் அல்ஹஜ் பதியுதீன் மஹ்மூத் இம் மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

முதன் முதலாக ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் நடைபெற்ற சாம்ராஜ்ய கல்வி மந்திரிகள் மகாநாட்டை அடுத்து நடைபெறும் ஐந்தாவது மாநாடு இதுவாகும். சாம்ராஜ்ய நாடுகளை எதிர்நோக்கும் கல்விப் பிரச்னைகள் இம் மாநாட்டில் விவாதிக்கப்படுவதுடன் கல்வித்துறை அனுபவங்களைப் பரிவர்த்தனை செய்து எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுவது பற்றியும் அமைச்சர்கள் ஆராய்வார்கள்.

ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் முதன்முதலாக நடைபெற்ற கல்வி மாநாட்டின் போது ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. சாம்ராஜ்ய உபகார நிதித் திட்டம் இதில் முக்கியமானது. இத் திட்டத்தின் கீழ் இதுவரை சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த 4 400 மாணவர்களுக்கு கல்வி உபகார நிதி வழங்கப்பட்டுள்ளது அத்துடன் 5000 ஆசிரியர்களும் 850 தொழில் நுட்ப ஆசிரியர்களும் இத்திட்டத்தின் கீழ் பயின்றுள்ளனர்.

## 'தமிழரை அழிக்க முடியாது'

உடுவில், வியாழன்

தமிழர்களை எந்த ஒரு இனத்தவர்களாலும் அழித்துவிட முடியாது. உலகில் முப்பத்தாறு நாடுகளில் தமிழ் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. இவற்றுள் இந்தியா, மலேசியா, இலங்கை ஆகிய மூன்று இடங்களிலுமே மிகஅதிகமாக தமிழ்ப் பாஷை உபயோகிக்கப்படுகின்றது. போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்தில் தமிழ்மொழி இருந்த நிலையிலேயே இன்றும் இங்கு இருக்கின்றது. சிங்களவர் தமிழ் மொழியை அழிக்கலாம் என நினைத்தால் அது பகற்கனவாகும். சிங்கள இனமே தமிழ் பரம்பரையை சேர்ந்தது".

உடுவில் எம்.பி. திரு வி. தர்மலிங்கம் சந்தரோடையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் இவ்வாறு சொன்னார்.

சந்தரோடை சுப்பிரமணியம் வாசிகசாலைக்கு அருகில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு திரு. தனபாலசிங்கம் தலைமை வகித்தார்.

## வெங்காயம் பல ரோக நிவாரணி

மொஸ்கோ, பெப். 11

சென்ற பத்தாண்டுகாலமாக கார்க்கோவ் ஆராய்ச்சியாளர்கள், மனித உடலில் வெங்காயத்தின் விளைவு பற்றி ஆராய்ந்து வந்தனர். அதன் பயனக புதிய தயாரிப்புக்கள் உருவாகியுள்ளன அவற்றுள் 'அலிசெப்' என்பதும் ஒன்று இரப்பைஜீரண மண்டலத்திற்கு இதமளிக்கும் இப்பொருள் இருதயத்திற்கு. குறிப்பாக பலவீனமான இருதயத்திற்கு மிகவும் நல்லது மிகமிக நீர்த்த 'அலிசெப்' சலவை (10 லட்சம் பங்கு நீர்த்த) இருதயத்தின் இரத்தக் குழல்களை விரிவடையச் செய்ய வல்லது.

கார்க்கோவ் சிகிச்சைக் கூடங்களில் இதனைப்பயன் படுத்தியபோது கிடைத்த விவரங்கள் இதன் தன்மையை ஊர்ஜிதப்படுத்தியுள்ளன, இரத்த மிகு அழுத்த நோய்க்குச் சிகிச்சையளிப்பதற்கு இதனைப் பயன்படுத்தலாம்

## இருதய நோய்க்கு சூரியனும் காரணம்?

மாஸ்கோ. பெப். 11

11 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் அதிகரித்த சூரியக் கிரியைகள் இருதய இரத்த ஓட்ட நோய்கள் தீவிரமடைவதற்குக் காரணமாக உள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தவிர தானிய விளைச்சலையும் அது பாதிக்கிறது என்பதும் தெரிய வந்துள்ளது. தாவரங்களில் நோய் ஏற்படுவது உயர்பட்ச சூரியக் கிரியையின்போது அதிகரிப்பதாகக் காணப்பட்டுள்ளது; தவிர. இந்தக் கால கட்டத்தின் போது தானிய விளைச்சலும் பாதிக்கப்படுகிறது, என்று லெனின்கிராட் ஆராய்ச்சிக் கூட ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்

வர்த்தகதூதுக்குழுவின்

## மேற்காசிய சுற்றுப்பயணம்

கோட்டை, வியாழன்

உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன தலைமையிலான 4 பேர் கொண்ட வர்த்தகக் குழுவொன்று நேற்று முன்தினம் மேற்காசிய சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு மேற்காசியாவுக்கு பயணமாகியுள்ளது.

மேற்காசியாவில் சுற்றுப் பயணம் செய்யும் இக்குழு அந்நாடுகளுடன் இலங்கையின் வர்த்தகத்தை அபிவிருத்திசெய்யும் சாத்தியக் கூறுகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடாத்தவுள்ளது.

### மணிவாக்கு

பாபம் புரிவது மனித இயல்பு. ஆனல் மனிதன் பாபம் புரிவது நிச்சயம் என்பது ஒருபுறமிருக்க, அவனை மீட்பதற்கான வழிகளை இறைவன் ஆக்கி வைக்கிருர் என்பது இருமடங்கு நிச்சயமாக உள்ளது.

— பரமஹம்ஸர்.

ஈழநாடு

Ee anadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் தை மாதம் 30ந் திகதி (12-2-71)

## ஒற்றுமை

நான்கு தமிழ்க்கட்சிகளுக்குமிடையில் ஒற்றுமை என்ற செய்தி இலங்கை வாழ் தமிழ்மக்கள் அத்தனை பேரின் உள்ளங்களையும் குளிரச் செய்திருக்கும். இந்த நல்ல காரியத்தைச் செய்த வல்வெட்டித்துறை மக்கள் பாராட்டுக்குரியவர்கள். ஒற்றுமை ஏற்பட்டதியது மட்டுமல்ல அரசியல் அமைப்பு அடிப்படைத் தீர்மானங்களுக்கு தமிழ்மக்கள் சார்பில் குறைந்தபட்சக் கோரிக்கைகளைக் கொண்ட திருத்தங்களையும் சமர்ப்பிப்பதற்கு இந்த நான்கு கட்சிகளும் உடன்பட்டதும் பெரிய காரியமாகும். இந்த ஒற்றுமை மகாநாட்டில் சில ஆட்சிமன்ற உறுப்பினர்களும் மற்றும் சில அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்ளவில்லை; ஒன்பது அம்சக் கோரிக்கை உடன்படிக்கையில் அவர்கள் கைச்சாத்திடவும் இல்லை என்பது உண்மைதான். ஆனாலும் இந்தக் குறைந்த பட்சக்கோரிக்கைகளை அவர்கள் ஏற்கமாட்டார்களென்று கூறுவதற்கில்லை.

வேறுபட்ட கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கொண்ட கட்சிகளைச் சார்ந்திருப்பினும் தமிழ்த் தலைவர்கள், தமிழ் ஆட்சிமன்ற உறுப்பினர்கள், தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் தமிழ்மொழிக்கு இந்த நாட்டில் சம உரிமை இருக்கவேண்டுமென்பதிலோ தமிழ்மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற நிலையில் இல்லாமல் மானத்துடன் வாழவேண்டுமென்பதிலோ அபிப்பிராயபேதமுள்ளவர்களல்லர். லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்ற இடதுசாரிக் கட்சிகள் இப்போது சில காரணங்களுக்காக மொழிக் கொள்கையில் மாறுதல் செய்திருப்பினும் தமிழ் மொழிக்குச் சமஉரிமை இருக்கவேண்டுமென்பதை ஒருகாலத்தில் வலியுறுத்தி வந்திருக்கின்றன. இந்தக் கட்சிகளில் அங்கம் வகிக்கும் தமிழர்கள் தமிழுக்கு உரிமை கிடைக்கவேண்டுமென்றும், தமிழ் மக்கள் தமது சொந்த நாட்டில் சகல உரிமைகளுடனும் மானத்துடன் வாழவேண்டுமென்றும் கேட்பதை மறுக்க மாட்டார்கள்.

வல்வெட்டித்துறையில் நடந்த ஒற்றுமை மகாநாட்டில் உருவாக்கப்பட்ட உடன்படிக்கையில் தமிழ்மக்களின் குறைந்தபட்சக் கோரிக்கைகளாக அமைந்த ஒன்பது அம்சக் கோரிக்கைகளும் தமிழ்மொழியும் தமிழ் மக்களும் முன்னர் அனுபவித்து வந்த உரிமைகளை மீண்டும் அனுபவிக்க வழி செய்ய வேண்டுமென்றே கோருகின்றன. புதிதாக எதையும் கேட்கவில்லை பிறருடைய உரிமைகளைப் பறித்துத் தமக்குத் தரவேண்டுமென்றும் கோரவில்லை.

எனவேதான், வல்வெட்டித்துறை ஒற்றுமை மகாநாட்டில் இடதுசாரி அரசியல் கட்சியைச் சேர்ந்த தமிழ்ப் பிரமுகர்களும் தமிழ் தேசிய ஆட்சிமன்றப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளாத போதிலும் ஒன்பது அம்ச உடன்படிக்கையில் கைச்சாத்திடாத போதிலும் தமிழ்மக்களின் நியாயமான இக் கோரிக்கையை ஆதரிப்பார்கள் என்று நம்ப இடமுண்டு.

நாட்டின் சரித்திரத்தையே மாற்றியமைக்கும் பெரும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெரும்பான்மை பலத்தை மட்டும் நம்பிக் காரியங்கள் செய்யும் சமயம் அல்ல. நாட்டின் அமைதியும் முன்னேற்றமும் தேசிய ஐக்கியமும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கிக்கொண்டிருப்பவர்களின் கைகளில் தங்கியிருக்கிறது.

இச்சமயத்தில் கட்சி அரசியல்வேறுபாடும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களும் தமிழ்மக்கள் மத்தியிலிருந்து ஒதுங்கவேண்டும். தமிழ் மக்களின் எதிர்காலம் புதிய அரசியல் அமைப்பில் பெரிதும் தங்கியிருக்கிறதென்பதையும் தமிழ்த் தலைவர்களுக்கும் மக்களுக்கும் ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் அதிக பொறுப்பும் கடமையும் இருக்கிறதென்பதையும் மறந்துவிடலாகாது.

## சதாத் யோசனைகளுக்கு

## யு. எஸ். வரவேற்பு?

நியூயோர்க், பெப். 11

சூயஸ் கால்வாயைக் கப்பல் போக்குவரத்துக்குத் திறந்து விடுவது பற்றி ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் அன்வர் சதாத் வெளியிட்டுள்ள கருத்துக்கள் ஆழ்ந்த பரிசிலனைக்குரியவை யென்று அமெரிக்க வெளி உறவு அமைச்சர் திரு ரோஜர்ஸ் தெரிவித்துள்ளார்.

அதிபர் சதாத்தின் யோசனைகளுக்கு இஸ்ரேல் அளித்துள்ள பதிலும் அனுகூலமாக விருக்கின்றது என்று அவர் தெரிவித்துள்ளார்.

சூயஸ் கால்வாயைத் திறந்துவிடுவது சம்பந்தமாக ஒத்துழைப்பதற்கு இஸ்ரேல் தயாராய் இருப்பதாக இஸ்ரேலிய பிரதமர் திருமதி கோல்டா மெயர் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார். ஒரு தலைபட்சமாக துருப்புகளை வாபஸ் பெறுவது பற்றி மட்டுமே அவர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவரின் யோசனைகளை இஸ்ரேல் நிராகரித்துவிட்டதாக வெளியான செய்திகளை இஸ்ரேலிய அரசாங்க வட்டாரங்கள் மறுத்துள்ளன.

# திருக்கேதீச்சரத்தில் மகா சிவ[ராத்திரி] வழிபாடு - அன்னதானம்

(சிவனடியான்)

வருகிற 23ந் திகதி செவ்வாய்க்கிழமை இரவு மகா சிவராத்திரி. எல்லாச் சிவாலயங்களிலும் சிறப்பாகத் திருக்கேதீச்சரத்திலும் சிவராத்திரி வழிபாடுகள் விசேஷமாக நடைபெறுகின்றன. ஸ்ரீ கௌரி அம்பாள் சமேத கேதீச்சரநாதருக்கு விசேஷ பூசை, அபிஷேகங்கள் நான்கு சாமங்களிலும் நடைபெறும்.

ஆலயத்தில் அன்று இரவு முழுதும் சைவப் பிரசங்கம், கதாகாலட்சேபம், தோத்திர பாராயணம், புராண படனம் முதலியன நடைபெற்று அடியார்கள் சிவசிந்தனையிலேயே இரவைக் கழிக்க ஒழுங்குகள் செய்யப் பெற்றுள்ளன.

வாகீச கலாநிதி திரு கி. வா. ஜகந்நாதன் அன்று அங்கு வந்து உபந்நியாசம் செய்கிறார். காலஞ்சென்ற நீதியரசர் சைவசிகாமணி ஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராசா தம்பதிகளின் பிள்ளைகள், தங்கள் பெற்றோர்களின் ஞாபகமாக திரு கி. வா. ஜவை வரவழைத்து, செல்வச்சந்நிதி, திருக்கேதீச்சரம், யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய இடங்களில் சமய உபந்நியாசங்கள் செய்விக்க ஒழுங்கு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இப்பிரசங்கங்களைப் பின்பு, புத்தக வடிவில் பிரசுரிக்கவும் உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது. திருக்கேதீச்சரத் திருப்பணி வேலைகளுக்கு அவசர பணம் தேவையாக இருப்பதால், அதற்கான நன்கொடையையும் அச்சமயம் அடியார்கள் கொடுக்கலாம்.

தாங்கள் ஜீவந்தர்களாக இருக்கையில் ஸ்ரீஸ்கந்தராசா தம்பதிகள் திருக்கேதீச்சரத் திருப்பணியிலும், அதற்கு உதவி திரட்டுவதிலும் விசேஷ அக்கறை எடுத்தனர். பல கூட்டங்களிலும் தலைமைவகித்துப் பேசியுள்ளார் அவர்களைப் பின்பற்றி அவரது புதல்வர் டாக்டர் ஸ்ரீபவான் ஸ்ரீஸ்கந்தராசா, அவரது சகோதரி டாக்டர் ஸ்ரீஸ்கந்தராசா சிவயோகம் இவர்கள் இத்திருப்பணிவிஷயத்தில், திருப்பணிச் சபையுடனும் அகில இலங்கை இந்து மாமன்றம் முதலியவற்றுடனும் ஒத்துழைத்து ஆவன செய்வது குறிப்பிடத்தக்கது

வழக்கம்போல் திரு ஆர். இரங்கநாதபிள்ளை, சிவராத்திரியன்று திருக்கேதீச்சரத்துக்கு வழிபட வரும் அடியார்களுக்குத் திருஞானசம்பந்தசுவாமிகள் மடத்தில் அன்னதானம் செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு, உணவுப் பொருட்களையும், பணத்தையும் திரட்டிவருகின்றார். பழநியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஸ்ரீ ஈசான சிவாச்சாரிய சுவாமிகள் தான் பல வருடங்களுக்கு முன் இலங்கை வந்திருந்த போது, அன்னதானத்துக்கு ஒழுங்கு செய்தாரென்பது குறிப்பிடத்தக்கது. இத்திருப்பணி சம்பந்தமாக அவர் பன்முறை இலங்கைக்கு வந்து யோசனை கூறியுள்ளார்கள் திருக்கேதீச்சரத்தில் அன்னதானம் செய்யும் பொறுப்பை அவர்தான் திரு. பிள்ளைக்கு அளித்தவர். சென்ற பல வருட காலமாக இச்சிறந்த பணியை நிறைவேற்றி அடியார்களுக்கு அவர் தொண்டு செய்துவருகிறார். கொழும்பு ஜிந்துப்பிட்டி கோவில் நிர்வாகத்திலும் அவர் ஈடுபட்டவர் அவரைப்போல் பல பல புனிதத் தொண்டுகளிலும் ஈடுபட்டு. அடியார்களுக்கு உற்சாகத்துடன் பணி செய்யக்கூடியவர்கள் இக்காலத்தில் மிகமிக அரிது அன்னதான சிவத்தொண்டரான திரு இரங்கநாதபிள்ளை, இத்தள்ளாத வயதிலும் வாலிப உற்சாகத்துடன் இந்த அடியார் பணியில் இவ்வாண்டும் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அவரும் டாக்டர் எஸ். அரியரத்தினம், எஸ். ஆறுமுகம் முதலியவர்கள் திருப்பணிச்சபையாரின் இத்தொண்டில் ஈடுபட்டுள்ளனர்.

சிவராத்திரியன்று பகலும் இரவும் எந்நேரமும் உணவு, பானம் முதலியன தயாராக இருக்கும். சிவராத்திரி மடம், ஸ்ரீ நாவலர் (அப்பா) மடம், அம்மா மடம், திருவாசக மடம் முதலிய பல இடங்களிலும் வந்தவர்களுக்கெல்லாம் அன்னதானம் முதலியன நடைபெறுகின்றன. உணவைப் பற்றிய கவலையில்லாமல் அன்றெல்லாம் தெய்வ வழிபாட்டில் கழிக்கமுடியும்.

சைவ நூல்கள் பலவும் அச்சமயம் அங்குவிற்பனைக்கு கிடைக்குமென்றும். அவ்வருமானம் திருப்பணி நிதிக்குச் சேருமென்றும் தெரிகிறது. பாலாவியில் நீராடி, சிவ தரிசனம்செய்து, பிரசாதம் பெறுவதுடன், சைவ நூல்களையும் வாங்கிவந்தால் வீட்டில் எப்போதும் அவை இருந்து, நல்வழி காட்டவும் மனக் கவலைகளைப் போக்கவும் உதவக்கூடும். பாலாவி குளத்தில் தீர்த்தம் நிறைந்துள்ளது.

தமிழ்ப் புதுவருடம் கழித்துப் பாலஸ்தானம் நடைபெறவிருக்கிறது. திருப்பணிக்கு அடியார்கள் கூடிய உதவியைச் செய்ய, இது நல்லதோர் சந்தர்ப்பமாகும்.

சிவராத்திரியன்று விசேஷ பஸ், ரயில் சர்வீஸுகளுக்கு ஒழுங்கு செய்யப்பெற்றுள்ளன, சுகாதாரம் முதலிய பல ஒழுங்குகளையும் மன்னார் அரசாங்க அதிபர் திரு கதிர்காமநாதன் செய்கின்றார். மன்னார் அன்பர்கள் சிவராத்திரிமடத்தில் தண்ணீர்ப்பந்தல் தர்மத்தை 2 நாட்களும் செய்யவிருக்கின்றனர். அன்றிரவு 9 30 முதல் மறுநாட் காலை 6-30 மணிவரை இலங்கை வானொலி அங்குள்ள நிகழ்ச்சிகளை அஞ்சல்செய்யும்.

# 'தமிழ்காங்கிரஸ் நாமத்துடன் அரசாங்கத்தில் சேருவோம்'

## கிளிநொச்சி எம். பி. கூறுகிறர்

யாழ்ப்பாணம், வெள்ளி

"ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் சேரும்போது தமிழ்க்காங்கிரஸ் என்ற நாமத்துடன்தான் சேருவோம் கடைசிவரை நாங்கள் தமிழ்க் காங்கிரஸிலிருந்து வெளியேற மாட்டோம். சிலர் எங்களை கசிடயிலிருந்து வெளியேற்ற முயற்சித்தாலும் ஆட்சிமன்றத்தில் தமிழ்க்காங்கிரஸ் என்ற நாமத்தில்தான் இயங்குவோம்"

தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணிச் செயலாளரும், கிளிநொச்சி எம் பியுமான திரு வி ஆனந்தசங்கரி நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு வி ஆனந்தசங்கரி மேலும் கூறியதாவது, தமிழ் காங்கிரஸ் கமிட்டி முடிவு செய்யமல். தலைவரின் ஆலோசனையைக் கேட்காமல், தமிழ்க்கட்சிகளுடன் சில தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்கள் சேர்ந்துகொள்வது சரியென்று கூறினல், தமிழ்க் காங்கிரஸ் ஆட்சிமன்ற குழுவிலுள்ள நாங்கள் மூவரும் அரசாங்கத்துடன் சேருவதில் என்ன தவறு இருக்கிறது? அரசாங்கத்தை எதிர்த்து எந்தவித உரிமையும் பெறமுடியாதென்பதை நமது தலைவர் அடிக்கடி கூறிவந்திருக்கிறார் அவரின் வழியைத்தான் நாங்கள் பின்பற்றுகிறோம். கடந்த தேர்தல்காலத்தில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் கூட்டங்களில்எல்லாம் அரசாங்கத்துடன் சேர்ந்து உரிமைகளைப்பெறுவோம் என்றுதான் கூறினேம் ஆதலால் அன்று கூறியதை இன்று நிறைவேற்றுகிறோம். இவதயாரும் மறுக்கமுடியாது?

கொழும்பு தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை ஆனல் அந்த முன்னணியை குறுகியகாலத்தில் அரசியல் வாதியாகவரவிரும்பும் ஒருவர் இயக்கிவருகிறார் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் இலங்கைதிரும்பியதும்இவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்கப்போகிறோம். உரும்பராய், வண்ணார்பண்ணை வாலிப முன்னணி கிளைகளையும் இவர்தான்பின்னணியில் நின்று இயக்கிவருகிறார் இந்த மூன்று கிளைகளையும் தவிர, வடபகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான தமிழ்க்காங்கிரஸ் கிளைகள் நாங்கள் அரசாங்கத்துடன் சேருவதை ஆதரித்துள்ளன அரசாங்கத்தில் சேருவதை ஆதரித்து தினமும் பல வாலிப முன்னணி கிளைகள் தீர்மானங்களை நிறைவேற்றி வருகின்றன.

......

## நெற் செய்கை மதிப்பீடு

கோட்டை, வியா

நாட்டின் சகல பகுதிகளிலும் நெல் செய்கை பண்ணப்படும் ஏக்கரின் அளவையும் செய்கை பண்ணப்படும் நெல்லின் அளவையும் மதிப்பீடு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது மேற்படி மதிப்பீடு வேலைகளில் கிராமசேவகர்களும் முக்கிய பங்கு வகிக்கவுள்ளனர்.

நாட்டின் நெற் செய்கை நிலைமையை அறிவதற்காகவும் மேலும் நெற் செய்கையை அபிவிருத்தி செய்வதற்காகவுமே அரசாங்கம் மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

பண்டாரநாயக்கா ம[ண்டபம்]

## மிகுதிப் ப[ணி] விஞ்ஞா[...]

கோட்டை, [...]

இம்மாதம் 13-ம் [...] நடைபெறவிருக்கும் [...] டாரநாயகா சர்வ[...] ஞாபகார்த்த மண்ட[...] அமைப்பதற்கான வேலை[...] பிரதமருடன் அமைச்சர்[...] வேலையில் ஈடுபடுவர்.

பிரதமரும் அமை[...] களும் இக் கட்டிட[...] அமைக்கும் பணியில் [...] லாளர்களுடன் இணை[...] கட்டிட வேலைகளுக்கு [...] தானமூலம்உதவுவார்க[...]

14-ந் திகதி சபாநா[...] திரு ஸ்டான்லி திலக[...] தலைமையில் 75 [...] மன்ற உறுப்பினர்கள் [...] தான வேலையிலீடுப[...] 15ந் திகதி உபசபாநா[...] ஜனுப் ஐ ஏ. காதர் [...] மையில் ஏனைய ஆட்சி[...] உறுப்பினர்கள் சிரம[...]

கான்ஸ்டபிள் மரண[...]

## ஒரு கி[...] 12 வீடுக[...]

கோட்டை, வியா[...]

சமீபத்தில் பொ[...] கான்ஸ்டபிள் ஒ[...] கொல்லப் பட்டதைய[...] அத்துல்கலபுர பகு[...] காட்டுப் பிரதே[...] மான அங்கேக[...] என்ற கிராமத்தில் 12[...] களுக்கு ஆத்திரம் கொ[...] கோஷ்டி யொன்று தீ[...] துக் கொளுத்தியிரு[...] றது அதேசமயம் [...] வீடுகளில் வசித்து [...] நூற்றுக்கணக்கானவ[...] பயத்தினால்வெளியூர்க[...] க்கும் காடுகளுக்கு[...] ஓடிப்போய்நிர்க்கதிக்கு[...] கியிருக்கிறார்கள்

கொல்லப்பட்ட கா[...] டபிளின் சடலம் [...] பிடிக்கப்பட்டதைத் [...] ர்ந்து இந்தக் கோஷ்டி [...] கிராமத்துக்குள் புகுந்த[...]

## 'சேவைய[...] மதிப்பை[...]

புலோலி, விய[...]

"மக்களின் நல்வா[...] காக எதுவித பல[...] எதிர்பாராமல் தன் வ[...] ளில் பெரும்பகுதியை[...] மையான சேவையில் ஈடு[...] துபவர்களை மக்கள் எ[...] மறந்து விடுவதில்லை, [...] ளத்தால் பொய்[...] வாழும் பெரியார்களை[...] கள் வானுறையும் [...] மாக மதித்து தங்கள் [...] தில் இருத்திக்கொ[...] கள்" இவ்வாறு வட[...] சிப் பகுதியில் கட[...] ந்த வைத்திய கலாநிதி[...] எஸ். புவிராசசிங்கம் [...] படிப்பிற்காக நியூசிலா[...] குச் செல்லவிருப்பதை[...] னிட்டு இப்பகுதி [...] மக்கள் சார்பில் நடைபெ[...] பிரிவுபசார வைபவ[...] உடுப்பிட்டி நாடாளு[...] உறுப்பினர் திரு கே. [...] கொடி கலந்துகொ[...] பேசுகையில் குறிப்பிட்[...]

டாக்டர் அவர்கள் [...] ளின் உள்ளங்களி[...] உயர்ந்த ஸ்தானத்தை[...] த்து வருகின்றார் ெ[...] நலச்சேவையில் மிகுந்[...] கறை கொண்டுள்ள [...] தனது கடமையை [...] காரிகள் போற்[...] கூடிய முறையி[...] சேவையாற்றி உள்[...] வடமராட்சிப் பகு[...]

# சிவராத்திரி

ாரநாயக்கா மண்டபம்:

## ிகுதிப் பனத்தில் தேசிய விஞ்ஞான நூலகம்

கோட்டை, வியா மாதம் 13-ம் திகதி பெறவிருக்கும் பண் நாயகா சர்வதேச வார்த்த மண்டபம் ப்பதற்கான வேலையில் மடுன் அமைச்சர்களும் யில் ஈடுபடுவர்.

தமரும் அமைச்சர் இக் கட்டிடத்தை க்கும் பணியில் தொழி ர்களுடன் இணைந்து ட வேலைகளுக்கு சிரம மூலம் உதவுவார்கள்.

ந் திகதி சபாநாயகர் ஸ்டான்லி திலகரத்ன மையில் 75 ஆட்சி உறுப்பினர்கள் சிரம வேலையிலீடுபடுவர். திகதி உபசபாநாயகர் ஐ ஏ. காதர் தலை ல் ஏனைய ஆட்சிமன்ற பினர்கள் சிரமதான வேலையிலீடுபடுவர். இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு அமைச்சினதும் நிரந்தரக் காரியதரிசிகள் தலைமையில் சிரமதான வேலை நடைபெறும். அடுத்து ஒவ்வொரு தேர்தல் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர்களும் தமது தேர்தல் தொகுதியைச் சேர்ந்த சிரமதான பணியாளர்களுக்கு தலைமை வகித்து சிரமதான வேலைகளிலீடுபடுவர்.

இச் சிரமதான வேலைகளினால் பல்லாயிரம் ரூபா மிச்சப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இம் மிகுதியான பணத்தில் தேசிய விஞ்ஞான நூலகம் ஒன்று நிறுவப்படும் என வீடமைப்பு கட்டிட அமைச்சர் திரு பீட்டர் கெனமன் தெரிவித்துள்ளார்.

ஸ்டபிள் மரணம் எதிரொலி:

## ஒரு கிராமத்தில் வீடுகள் தீக்கிரை

சோட்டை, வியாழன் பத்தில் பொலிஸ் ஸ்டபிள் ஒருவர் லப் பட்டதையடுத்து ல்கலபுர பகுதியில் ட்டு பிரதேச அங்கேகடவர கிராமத்தில் 12 வீடு ஆத்திரம் கொண்ட டி பொன்று தீவைத் கொளுத்தியிருக்கின் அதேசமயம் இந்த ளில் வசித்து வந்த கணக்கானவர்கள் தினால் வெளியூர்களுக்கு காடுகளுக்குள்ளும் போய் நிர்க்கதிக்குள்ளா க்கிறார்கள்

ால்லப்பட்ட கான்ஸ் ின் சடலம் கண்டு கப்பட்டதைத் தொட இந்தக் கோஷ்டியினர் த்துக்குள் புகுந்து வீடுகளுக்கு தீ வைத்ததுடன் அங்கிருந்த பொருட்களையும் கொள்ளையடித்திருக்கிறார்களாம்.

கான்ஸ்டபிள் மரணத்தின் பின்னர் லொறிகளில் வந்த ஆயுதம் தரித்த இக் கோஷ்டியினர் மேற்படி வீடுகளில் இருந்தவர்களை வெளியே இழுத்துத் தாக்கித் துரத்தியதுடன் அவர்களின் உடைமைகளையும் நாசம் செய்து தீயும் மூட்டினார்களாம். இந்தக் கோஷ்டியினரின் கொடுமைதாளாது அந்த வீடுகளிலிருந்த பெண்கள் காடுகளுக்குள் ஓடி அடைக்கலம் புகுந்துள்ளார்களாம்.

இது விஷயமாக குருணை சில கல்கமுவ பகுதிகளைச் சேர்ந்த பொலிசார் விசாரணைகள் நடத்தி வருகின்றார்கள்.

## சேவையால் மக்களின் மதிப்பைப் பெற்றார்'

புலோலி, வியாழன் க்களின் நல்வாழ்வுக் எதுவித பலனையும் பாராமல் தன் வாழ்நா பெரும்பகுதியை உண் ான சேவையில் ஈடுபடுத் ர்களை மக்கள் எளிதில் விடுவதில்லை. உன் தால் பொய்யாமல் ம் பெரியார்களை மக் வானுறையும் தெய்வ மதித்து தங்கள் மன இருத்திக்கொள்வார் இவ்வாறு வடமராட் பகுதியில் கடமைபுரி வைத்திய கலாநிதி திரு. புவிராசசிங்கம் மேற் பிற்காக நியூசிலாந்துக் செல்லவிருப்பதை முன் இப்பகுதி பொது ர்சார்பில் நடைபெற்ற பசார வைபவத்தில் பிட்டி நாடாளுமன்ற பினர் திரு கே ஜெயக் டி கலந்துகொண்டு கையில் குறிப்பிட்டார் டர் அவர்கள் மக்க உள்ளங்களில் ஓர் ந்த ஸ்தானத்தை வகி வருகின்றார் பொது சேவையில் மிகுந்த அக் கொண்டுள்ள இவர் கடமையை மேலதி கள் போற்றக் முறையிலும் யாற்றி உள்ளார். மராட்சிப் பகுதியில் குழந்தைகள் போலியோ தடுப்பு வியாதியை பரவாமல் இவர் எடுத்த நடவடிக்கைகள் என்றும் இப்பகுதி மக்களின் மனதில் நிலைத்து நிற்கும்.

பிரியாவிடை விருந்திற்கு வைத்திய கலாநிதி திரு எஸ் புவிராசசிங்கம் நன்றி தெரிவித்து பேசுகையில தெரிவித்ததாவது:

"இப்பகுதி மக்களும் எனது சுகாதார உத்தியோகத்தர்களும் எனக்களித்த ஒத்துழைப்போடுதான் என் கடமையைப் புரிந்து வந்தேன் மக்களுக்காகச் சேவையாற்ற புறப்பட்ட நாம் மக்களிடை இரண்டறக் கலந்து பழகி அவர்களது அன்றாட தேவைகளை உணர்ந்தால் தான் நம்மால் உண்மையான சேவையாற்ற முடியும் அதிகாரி என்ற கோதாவில் நாம் இருந்து விட்டால் பலமான நான்கு சுவர்களுக்கு மத்தியில் மட்டும் தான் நாம் அதிகாரியாக இருக்கலாம். உண்மையான சேவை செய்யும் அதிகாரியாக இருக்கமுடியாது

அடுத்து மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி அதிகாரி டாக்டர் கே. கதிர்காமத்தம்பி. ஆசிரியர் திரு எஸ் செல்லப்பா ஆகியோரும் சொற்பொழி வாற்றினார்கள்.

### திருவிடை மருதூரில் திருமுறைக் கருத்தரங்கம்

இரு ஈழப் பிரதிநிதிகள் செல்கின்றனர்

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடை மருதூரிலுள்ள ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானத்தில் இம்மாதம், 12-ம் 13-ம், 14-ம் திகதிகளில் திருமுறைக் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

முதல்நாள் விழாவில் ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானம் அருளுரை வழங்குவார்கள். அதன்பின்னர் பேராசிரியர், டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், திரு. சொ. சிங்காரவேலன், பாலூர் கண்ணப்ப முதலியார், சித்தாந்த கலைச்செல்வர் திரு. க வச்சிரவேல் முதலியார், தொண்டை மண்டல ஆதீனத் தலைவர், தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், வித்துவான் வி. சா. குருசாமி தேசிகர் முதலியோர் உரையாற்றுவார்கள்.

இரண்டாம் நாள் விழாவில் திரு. சா. கணேசன், எம். எல். சி. காரைக்குடி, திரு. மு. அருணசலம், புலவர் ந. ரா. முருகவேள், தவத்திரு அழகரடிகள், பேராசிரியர் க வெள்ளைவாரணனார், ஒளவைதுரைச்சாமிப்பிள்ளை, டாக்டர் வ. ஆ. தேவசேனாதிபதி, இலங்கையிலிருந்து திருமதி இரத்தின நவரத்தினம், திரு. அருள் தியாகராசா முதலியவர்கள் விழாவிற் கலந்துகொள்கிறார்கள்.

மூன்றாம் நாள் விழாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் திரு. டி. எம், நாராயணசாமிப்பிள்ளை, பேராசிரியர் திரு சி. அருணைவடிவேல் முதலியார், மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் திரு அ. ச. ஞானசம்பந்தம். தவத்திரு சபாபதி சுவாமிகள், தவத்திரு சுந்தரசுவாமிகள் திரு. ஜி. கல்யாணம், வித்துவான் கே, எம் வெங்கடராமையா ஆகியோர் உரையாற்றுவார்கள்.

கொழும்பில் நடந்த தீமிதிப்புப் போட்டி பெரும் குழப்பத்தில் முடிந்ததைப் பற்றித்தான் ஊரெல்லாம் நாடெல்லாம் பேச்சு. ரயிலில் வரும்போது பல சிங்கள வரும் சிங்களப்பத்திரிகைகளை வைத்துக்கொண்டுபடித்துச் சிரித்துக் கதைத்தனர். தெய்வ நம்பிக்கையற்ற டாக்டர் காரிலே பொன் சேகா சவாலில் கூறியநிபந்தனைப்படி தீயில் இறங்காமல் இருந்துவிட்டதைப் பற்றி ஏதேதோ பேசினர்.

பக்தர் கோஷ்டியைச்சேர்ந்தவர்கள் நாளெல்லாம் பூசையிலும் பிரார்த்தனையிலும் கழித்து "ஹரோஹரா" கோஷங்கள் செய்துகொண்டு தீமிதிப்பை வெற்றியாகச் செய்தார்கள் உடன் நிபந்தனை படி டாக்டர் காரிலோவும் அவரது கோஷ்டியினரும் தீயில் இறங்கி இருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், ஏற்கெனவே தீ மிதியலை செய்த பக்தர்களின் பாதங்களைப்பார்க்கவேண்டுமென்றும், அது சுட்டுப்புண்ணாகி இருப்பின் தாங்கள் தீ மிதிப்பலை செய்யவேண்டிய அவசியமே இராதென்றும் ஆகவே முதலில் பக்தர்களின் பாதங்களை பரிசிலனை செய்யவேண்டுமென்றும் வாதித்தார்கள் நேரம் ஆகிக்கொண்டே இருந்தது. தீயும் வரவர சூடு குறைந்து ஆறிவந்தது. அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் பரபரப்படைந்தனர் தீமிதியலுக்காக டாக்டர் காரிலோ, சாரயத்தைச் சற்றுப்பருகும் படமொன்றையும் பத்திரிகையில் பார்த்தேன் அவரும் அவரது சகாக்களும் தீமிதியலுக்கு பக்தியும் ஆசாரமும் தேவையில்லை என்பதைக் காட்ட மாமிசமும் சாப்பிட்டார்களாம் இவ்வளவும் செய்துவிட்டு சவாலின்படி அவர்கள் தீயில் இறங்க மறந்து ஏதேதோ சாக்குச் சொன்னதால் மக்களில் பலர் ஆத்திரமடைந்தனர்

தண்ணீர் ஊற்றி தீயை அணைத்தனர் வெற்றி பக்தரான திரு முத்துகுடாவுக்குத்தான் என்று கோசமிட்டு

# ஜெயராஜன் எழுதுவது..

அவரை தோளில் தூக்கிச சென்று ஹரோஹரா ஆரவாரம் செய்தனர் மக்களிடையே அமளிதுமளி அதிகரித்ததால், போட்டியை பொலிசார் நிறுத்தி விட்டதாக அறிவித்தனர் அவர்கள் மட்டும் டாக்டர் கோஷ்டியினருக்கு பாதுகாப்பு அளித்திராவிட்டால், அவர்களது உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கும் போட்டியில் நீதிபதிகளாக இருந்தவர்களும் எங்கோ மறைந்துவிட்டார்கள் வெற்றிதோல்வியைப் பற்றி ஒரு தீர்ப்பும் அளிக்கப்படவில்லையாம் ஆனால் இரு கோஷ்டியினர் படங்களைப பார்த்தால் வெற்றியும் தோல்வியும் யாராருக்கு என்பது சொல்லாமலே விளங்கும் டாக்டர் காரிலோவும் அவரது கோஷ்டியினரும் முகத்தில் ஈயாடாமல் பெரும் ஏமாற்றத்துடன் திகைத்து நிற்கிறார்கள் ஆனால் பக்தர் கோஷ்டியோ இருகைகளையும் சிரம்கூப்பி தங்கள் தலைவர் முத்துகுடாவை தலைக்குமேலே தூக்கி கூத்தாடுகிறார்கள் முகமெல்லாம் ஒரே சிரிப்பு இதிலிருந்து வெற்றியாருக்கென்பது தெளிவாக விளங்குகிறது

இதெல்லாம் எதிர்பார்க்கப்பட்டதுதான், இந்தச் சவாலால் ஏற்பட்ட ஒரே ஒரு நன்மை, இனி இந்த மாதிரி போட்டிகள் பகிரங்கமாக நடக்க அனுமதிக்கப் படமாட்டாதென்பதே. இப்போட்டிக்கு எல்லாபாதுகாப்புகளும் அளிப்பதாக அறிவித்த பொலிசாரால் அமைதியை நிலைநாட்ட முடியவில்லை. பொதுமக்களிடையே அவ்வளவு பரபரப்பும் உணர்ச்சி வேகமும் தடியடிசெய்து மக்களைக் கலைக்க வேண்டியதாயிற்று மக்களின் நம்பிக்கையைப் புண்படுத்தி ஆத்திரமூட்டும் இவ்விதகாரியங்களுக்கு பொலிசார் அனுமதித்தே இருக்கக்கூடாது இந்தப் பெரும் பாடத்தைக்கற்ற பின், இனி இவ்வித போட்டிகளை அவர்கள் அனுமதிக்க மாட்டார்களென்றே நம்புவோம்.

டாக்டர்காரிலோ தமது தோல்வியையும், பக்தர்களின் வெற்றியையும் வாய்விட்டு ஒப்புக் கொள்ள மாட்டார்தான். என்றாலும் பகுத்தறிவாளரான அவரும் இந்தப்போட்டியால் மக்களின் உணர்ச்சி வேகம் எப்படி இருக்குமென்பதை முன்கூட்டியே பகுத்தறியவில்லை. இனி அவரும் அவரதுசகாக்களும் இவ்வித வீண்வேலைகளில தலையிடாமல் மக்களின் நோய்களைத் தீர்ப்பதில் தங்கள் முழு நேரத்தையும் செலவழிப்பதே பகுத்தறிவாகும்.

பக்தர்கள் கோஷ்டியில் எல்லாரும் சிங்கள பௌத்தர்கள். 'ஹரோ ஹரா' என்று கோஷித்து நெற்றியில் திருநீறு, சந்தனம், குங்குமமிட்டு பகலெல்லாம் உபவாசமிருந்து வேல்வைத்து வழிபட்ட அவர்களை இந்துக்களல்ல என்று எப்படிச் சொல்ல முடியும்? பௌத்த இந்து ஒற்றுமையை அந்த கதிர்காமக் கடவுள் எவ்வளவு அற்புதமாக ஏற்படுத்திவருகிறார்? எதிர்காலத்திலே இந்த நாட்டில் தெய்வ அருளால் ஒற்றுமையும் முன்னேற்றமும் ஓங்கும் என்ற நம்பிக்கை இதனால் ஏற்படுவதாகஉள்ளது.

# கடலுக்கடியில் அணுகுண்டு சோதிப்பதற்கு தடை

## ரஷ்யா, யு. எஸ். பிரிட்டன் உடன்பாடு

லண்டன், பெப். 11 கடல் பரப்புகளிலும், கடல் படுக்கைகளிலும் அணு மற்றும் பேரழிவு ஆயுதங்களைப் பரிசோதிப்பதைத் தடைசெய்வதற்கான உடன்படிக்கையொன்றில் வல்லரசு நாடுகள் கையெழுத்திட்டிருக்கின்றன.

அமெரிக்கா, பிரிட்டன், சோவியத் யூனியன் ஆகிய நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கின்றன.

இந்த ஒப்பந்தம் சடைசியில கையெழுத்திட்டிருப்பது குறித்து சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் மகிழ்ச்சி தெரிவித்திருக்கின்றார்.

### இந்துசமுத்திரம் பற்றி மொரிஷியஸ் பிரதமர்

இந்து சமுத்திரம் பதற்ற மற்ற பிரதேசமாகவே இருந்துவரவேண்டும் என்று மொரிஷியஸ் பிரதமர் திரு. ராம்குலாம் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார். சிங்கப்பூரில் நடைபெற்ற காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டு விட்டுத் தாயகம் திரும்பியதும் இந்தக் கருத்தை அவர் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார். இந்து சமுத்திரப் பிரதேசத்தில் தளம் ஒன்றை நிறுவும்படி தாம் எந்த நாட்டுக்கும் யோசனை கூறியது கிடையாதென்றும் அவர் சொன்னார்.

மொரிஷியஸ் தீவில் தளம் அமைப்பதற்கு அனுமதிப்பதா இல்லையா என்பது பற்றித் தீர்மானிக்கவேண்டியவர்கள் மொரிஷியஸ் மக்களேயன்றி வேறு யாருமல்ல என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

— —

### காணமற்போன ஜவுளி கைப்பறறப்பட்டது

கோட்டை, வியாழன் பொலிசார் நேற்று முன்தினம் புறக்கோட்டை கடைகளைச் சோதனையிட்டு 20000 யார் இறக்குமதி செய்யப்பட்ட ஜவுளிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

சமீபத்தில் சலுசலாவில் இருந்து காணமற்போன 32000 யார் ஜவுளியில் கைப்பற்றப்பட்ட மேற்படி ஜவுளி ஒரு பகுதியாகும் எனப் பொலிசார் கண்டு பிடித்துள்ளனர். இந்தத் துணிவகைகளை சலுசலா கைத்தொழிற் தேவைகளுக்காக இறக்குமதி செய்ததெனச் சலுசலா தெரிவித்துள்ளது.

### பனம் பொருள்... (8ம் பக்கத் தொடர்ச்சி) குமரப்பாபுரத்தில் வருவாய்

குமரப்பா புரத்திலுள்ள பனம் தொழில்பேட்டையில் பலபொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. மதுவிலக்கின்பின் இந்தியாவில் நாலு கோடி ரூபா பனைவெல்லம் தயாரிக்கப்பட்டுள்ளது 4 கோடி மதிப்புள்ள இதர பனைப் பொருட்கள் தயாரிக்கப்பட்டது. இதன் மூலம் 2லட்சம் குடும்பங்கள்வாழ்கின்றன.

பனை ஓலைகளை தூளாக்கி தரமுள்ள காகிதம் உற்பத்தி செய்ய முடியும் தன் மூலம் காகிதங்களைமலிவாக பெற வாய்ப்பு ஏற்படும் பனைகளை இனிமேல் நடும் போது தென்னைகள் நடுவது போல் வரிசையாக நடவேண்டும் அப்படி நட்டால் அவற்றின் ஊடாக வந்திரங்கள் செல்வதற்கு வசதியாக இருக்கும்.

### கருப்பணி விற்பனை வேண்டும்

இலங்கையில் பால்சபையினர் பாலை போத்தலில் அடைத்து விற்பனை செய்கின்றார்கள் இதே போல இங்கும் போத்தலில் கருப்பணியை அடைத்து விற்பனை செய்யலாம்.

காரைநகரைச் சேர்ந்த திரு ஏ விஜயரத்தினம்சாட்சியமளிக்கையில் கூறியதாவது பனம் ஓலையிலிருந்து நெருப்பு பெட்டியும் குச்சியிலிருந்துநெருப்புக்குச்சியும் தயாரிக்கலாம் இப்படித் தயாரித்தால் மலிவாக விற்பனை செய்யமுடியும்.

### பனை ஊமலில் சவுக்காரம்

பனை ஓலையால் தயாரிக்கப்பட்ட நெருப்புப் பெட்டியையும் குச்சியையும் விசாரணைக் குழுவிடம் இவர் காட்டினார்.

பனம் ஊமலில் உள்ள சொட்டை எடுத்து ஆராய்ச்சி செய்து அதில் சவுக்காரம் செய்யக்கூடிய எண்ணவகை ஏதாவது பெற முடியுமோ என அறியலாம்.

துனுக்காய் மல்லாவி அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு எஸ். மயில்வாகனம் கூறியதாவது தற்போதுள்ள பனை மரங்களை அழிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

பனம்பொருள்களை விற்பனை செய்ய தனியான கூட்டுத்தாபனம் அலது இயக்கம் வேண்டும் ஊர்களில் கொள்வனவு நிலையங்களும் வெளியூர்களில் விற்பனைநிலையங்களும் வேண்டும். பனையின் விசேட தன்மைகள் ஆராயப்படவேண்டும்.

எழுவைதீவு கிராமமுன்னேற்றச் சங்க சார்பில் திரு மனுவேல்பிள்ளை வேலணை பனம்பொருள் உற்பத்தியாளர் சங்க தலைவர் திரு வ சண்முகராசா. கரைச்சி கைத்தொழில் அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

# 'ஒழுக்கத்தை வளர்க்க நாடகம் உதவ வேண்டும்'

— கலையரசு

தாவடி, வியா

"நாட்டுப் பற்றையும் சீர் திருத்தத்தையும் வீர உணர்ச்சியையும் தளர்ந்த மனதைத் தட்டியெழுப்பி நல்லுணர்வு ட்டும் தன்மையையும் ஏற்படுத்தவும் தீய வழியில் செல்பவர்களை நல் வழியில் ஒழுகசெய்யவும் சிறந்த சாதனம் நாடகக்கலை "நம் தமிழ்ப் பெண்கள் இசையையும் நாட்டியத்தையும் பயிலுதல் வேண்டும் இதனுல் உடல் நலமும்உள நலமும் பெறமுடியும்"

இவ்வாறு தாவடி சாந்தி கலைவளர்ச்சி மன்றத்தின் 10-வதுஆண்டு நிறைவுவிழாவின் 8-ம் நாள் நிகழ்ச்சிகளில் கலந்துரையாற்றிய முதலியார். திரு. செ. முத்துத்தம்பி கூறினர்.

திரு பொ. செல்வரத்தினம் தலைமை வகித்த இவ் விழாவில் கலைமணி திரு. க. வடிவேலுவின் கலைச்சேவைக்குப் பாராட்டளிக்கப்பட்டது. இவ்வைபவத்தில் சிறப்புரை நிகழ்த்திய கலையரசு திரு. க. சொர்ணலிங்கம் கூறியதாவது!

"எம்.ஆர். கோவிந்தசாமி இலங்கைக்கு வந்து நாடகங்கள் நடாத்திய காலத்தில் அவருக்குப் பிற்பாட்டுப் பாடிப் பெருமையளித்தவர் கலைமணியின் தந்தை அண்ணாவியார் சுப்பையா, தந்தையின் வழியில்மைந்தனும் புகழீட்டுதல் பெருமைக்குரியதே.

"இப்போது சமூகசீர் திருத்த நாடகங்கள் என்ற பெயரில் நடிக்கப்பட்டுவரும் நாடகங்கள் மக்களைக் கீழ் நிலைப்படுத்துவதாகப் பெரும்பாலும் அமைவதைப் பார்க்கும் போது மிகவும் வேதனையடைய வேண்டியுள்ளது. எனவே, சமூகத்தில் ஒழுக்கத்தையும் நல்லுணர்வையும் வளர்க்கும் வகையில்நாடகங்களைத் தயாரித்தல் வேண்டும்

உடுவில் எம். பி திரு. வி. தருமலிங்கம் பேசுகையில் "மன்னர்கள் கட்டிக்காத்த தமிழ்க் கலைகள் இன்று மக்களாலும் வளர்க்கப்பட்டு வருகிறதென்றும் நெல்லை விதைத்து நீர்ப்பகச்சி பயிராக்கிச் செழிக்கச் செய்வது போல, தமிழ்க்கலைகளையும் பாதுகாக்கவேண்டியது தமிழ் மக்களின் தலையாய கடமையென்றும் சொன்னர்

காந்தி கலைவளர்ச்சி மன்றத்தினரால் கலைமணிக்குப் பொன்னுடை போர்த்தி வாழ்த்துப்பாவும் வாசித்து அளிக்கப்பட்டது. கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெற்றன.

## பொன்ஜூபிலி விழா

அச்சுவேலி, வியா

வண. ர. சாள்ஸ் நவரத்தினம் வண. உவில்யம் யேசுதாசன் ஆகியோர் சந்நியாச ஐம்பதாம் வருட ஜூபிலி விழா அச்சுவேலிப் புனிதசூசையப்பர் கோவிற் கட்டளைக்குருவானவர் வண. எஸ். வெண்டகோன் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஜூபிலி நாயகர்கள், நா. சின்னத்துரை யோன் ராசுரெூ ஸ்ரனிஸ்லோஸ் ஆகியவர்களால் மாலையிடப்பட்டு வரவேற்கப்பட்டனர். கட்டுப்பலியில் வண. பாலசுந்தரம் சுவாமியால் சிறந்த பிரசங்கம் நடத்தப்பட்டது. உபசரணை விழா வண. ஜே செல்வராசா சுவாமியினுல் நடத்தப்பட்டது. உபசரணைக் கூட்டத்தில் அச்சுவேலிக் கிராமச்சங்க உப தலைவர் நா. கணபதிப் பிள்ளை ஏ. ஆர். மனுவேல் பிள்ளையினுல் உபநியாசம் நிகழ்த்தப்பட்டது ஆ. இதிசோஸ்ரம் எல்லோருக்கும் நன்றி கூறினர்.

## பொலிஸ் அதிகாரிக்கு பாராட்டு

மாவிட்டபுரம், வியா

'இப்பகுதிக்கு வருமுன்பே பொலிஸ்பகுதியில் கடமை வீரனுகத் திகழ்ந்த திரு. நவரத்தினராஜா இப்பகுதியில் சொற்பகாலம் கடமையாற்றிய போதும் தமது கடமையை திறம்பட செய்தது மாத்திரமல்லாது மக்கள்மத்தியில் அமைதியான சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளார் என சுன்னுகப் பொலிஸ் நிலையபொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி மன்னர் பொலிஸ் தலைமைக் காரியாலயப் பொறுப்பதிகாரியாகப்பதவி உயர்வு பெற்றுச் செல்லும் திரு எஸ் எஸ் நவரத்தினராசாவுக்கு மல்லாகம், அளவெட்டி பொதுமக்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் உடுவில்தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி தர்மலிங்கம் பேசுகையில் கூறினர்.

அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் யாழ் மெற்றல் இன்டஸ்றீஸ் உரிமையாளர் திரு தா திருநாவுக்கரசு தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

வழக்கறிஞர் ஆர் என் சிவப்பிரகாசம் திரு கே நாகலிங்கம், வழக்கறிஞர் ஸ்ரீதரன். வி ஆர் ஸ்ரீநடராசா, இ பாலசுப்பிரமணியம், தா சண்முகநாதன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

'சோக்கலோசண்முகம்' என்ற நாடகம் உட்படமற்றும் கலைநிகழ்ச்சிகளும்இடம் பெற்றன.

## மிளகாய் கன்றுகளைத் திருடினராம்

மாவிட்டபுரம், வியா.

அண்ணனின் மிளகாய்க் கன்றைகளை வெடுத்த தம்பிக்குக் கொடுத்தாராம் ஒருவர், இப்படியான சம்பவம் ஒன்று தையிட்டியில் நடைபெற்றது.

தையிட்டியைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான 2 கோழிகளை நஞ்சூட்டியதாகவும் அவருக்குச் சொந்தமான மிளகாய்க்கன்றுகளை களவாடியதாகவும் அவருடைய தம்பிக்கு எதிராக காங்கேசன்துறைப் பொலிஸில் புகார்செய்யப்பட்டது. வீரக்குட்டி இளையதம்பியை பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை செய்துவருகின்றனர்,

## 25 பேருக்கு புலமைப்பரிசில்

கோட்டை, வியா

விவசாயம், ஹொட்டல் வேலை, கைத்தொழில் போன்ற பல துறைகளில் பயிற்சி பெறுவதற்கு மேற்கு ஜெர்மனி 25 இலங்கையருக்குப் புலமைப் பரிசில் வழங்குகிறது.

இப்புலமைப் பரிசிலைப் பெறுபவர்களில் தனியார் துறையில் தொழில் புரிபவர்களும் உள்ளனர். ஏற்கனவே மேற்கு ஜெர்மனியில் புலமைப் பரிசில் பெற்று இலங்கையர் சிலர் பயிற்சி பெறுகின்றனர்.

## எம். ஜி. ஆர் இளைஞர் மன்றம்

யாழ்ப்பாணம் வெள்ளி

நாவற்குழி கிராமத்து எம். ஜி. ஆர் ரசிகர்கள் ஒன்றுசேர்ந்து எம். ஜி. ஆர் இளைஞர் மன்றம் ஒன்றை ஆரம்பி துள்ளர்கள் இதன் திறப்பு விழா இம் மாதம் 8-ம் திகதி நடைபெற்றது. நாவற்குழி கிராமச்சபைத் தலைவர் திரு சடாட்சரம் அறிஞர் அண்ணுவின் உருவப் படத்தைத் திரைநீக்கம் செய்து மன்றத்தைத்திறந்து வைத்தார்.

தமிழினத்தின் எதிர்காலத்திற்கு எம். ஜி ஆர் ரசிகர்கள் ஆற்ற வேண்டிய பணியைப்பற்றிய சாவகச்சேரி ஆட்சி மன்றஉறுப்பினர் திரு வ.ந. நவரத்தினம்தெமிவித்தர் திரு. ஆனந்தவினுயகம் இ குணநாயகம் செ இரத்தினசிங்கம் க. யோகநாதன் க தெய்வேந்திரம் எஸ். ஏ, மக்கள்தாசன் அண்ணு அறிவகத் தலைவர் திரு. மகேந்திரராசா ஒ பொ சாமி ஆகியோரும் உரையாற்றினர் திரு சுந்தரம் தலைமை தாங்கினுர்,

## 'விசேஷ கூட்டம் உடன் கூட்டுக'

வல்வெட்டித்துறை.வியா

வல்வெட்டித்துறை நகரசபையின் விசேட கூட்டம் ஒன்றைஉடனடியாகக்கூட்ட வேண்டுமென்ற மகஜர் ஒன்று நகரசபைத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஒன்பது அங்கத்தவர்கள் கொண்ட நகரசபையில் 5 அங்கத்தவர்கள் கையொப்பமிட்டுள்ளஇம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

கடற்கரையோரங்களில் வசிப்போர் தங்கள் விருப்பத்திற்கு நிலங்களைப்பிடித்து மதில் போடுவதைத் தடுக்க வேண்டும் புதிய மலசல கூடங்கள் கட்டப்பணம் இல்லாதவிடத்து பழைய மலசல கூடங்களை விரைவில் திருத்தல்.எல்லைக்குள் அமைக்கப்பட்டிருக்கும் ஐஸ்வாடிகள் ஒவ்வொன்றுக்கும் இப்பொழுது ரூபா 100வரி அறவிடப்பட்டுவருகிறது அந்த வரியில் ஏழைகளுக்கு சலுகைகள் காட்டவேண்டும். நகரசபை விஸ்தரிக்கப்பட்டிருப்பதால் மேலதிகமாக ஒரு மருத்துவ தாதியை நியமித்தல் அவசியமாகும்.

## கடலோரம் நவீன உல்லாச விடுதி

கொழும்பு, வியா

பிரிட்டிஷ் வெளிநாட்டு விமானசேவை ஸ்தாபனத்தாரும் இலங்கைத் தனியார் துறையினரும் கூட்டாகச் சேர்ந்து முதலீடுசெய்து நிர்மாணித்துள்ள நவீன உல்லாசவிடுதி ஒன்று இம் மாதத்திலிருந்து இயங்கப் போகிறது. 'பிஹாஸஸ் ரீவ்' என அழைக்கப்படும் இந்த ஹோட்டலை உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் திரு. பி. பி. ஜி; கலுகல்லே இம்மாதம் 16-ம் திகதி சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைப்பார்.

## புதிய பிரிவு

கோட்டை, வியா

தனியார் அரசாங்கதுறைகளின்மூலம் அத்தியாவசிய உபஉணவுப் பொருட்கள் எவ்வாறு விநியோகிக்கப்படுகின்றன என்பதைக்கவனிக்க வர்த்தக இலாகா புதிய பிரிவை அமைத்துள்ளது

இப்பிரிவினர் உபஉணவுப் பொருட்கள் நாடெங்கும் சமமாகஅரசாங்கத்தின் விதிகளுக்கு இணங்க விநியோகிக்கப்படுகின்றனவா என்பதைக் கவனிப்பதோடு உணவுப் பொருட்களின் பற்றாக்குறை பற்றியும் ஆராயும்.

## புதிய நிர்வாகிகள்

மாவிட்டபுரம் வியா

பாஷையூர் ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சிக்கிளையின் உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

போஷகர்: திரு செல்லையா குமாரசூரியர் (தபால் தந்தி அமைச்சர்), உபபோஷகர்கள்: திருவாளர்கள் அ த துரையப்பா ஜே பி. யு எம். ஜி ஜெ செபஸ்ரியாம்பிள்ளை ஜே பி. தலைவர்: மி அமிர்தவாசகம்.உபதலைவர்: அ முத்துமணி, செயலாளர்: எஸ் கே செபஸ்ரியாம்பிள்ளை. உபசெயலாளர்: ஏ செபஸ்ரியாம்பிள்ளை ஆசிரியர்.பொருளாளர்: மு செல்லத்துரை.

0

மாவிட்டபுரம், வியா

தையிட்டி ஸ்ரீ கண்ணகி அம்பாள் ஆலய சைவ முன்னேற்றக்கழக வருடாந்தக் கூட்டம் திரு வேலாயுதம் பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள் திரு.க.ஜெயபாலசிங்கம் (முன்னுள் ப. ச. தலைவர் காங்கேசன் துறை), திரு. எஸ். பாலசுந்தரம் (முன்னுள் கிராம சேவையாளர் வலி வடக்கு), திரு. இ. செல்லையா (செல்லப்பா அன் கோ ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்). திரு. கா சிவலிங்கம் (பிறப்பு பிறப்பு விவாகப் பதிவு அதிகாரி வலி-வடக்கு காங்கேசன் துறை), திரு இ. சி. கணபதிப் பிள்ளை (சிமெந்தக் கொழிற்சாலை காங்கேசன் துறை) தலைவர் திரு இ சின்னத்துரை, உப- தலைவர் திரு. வ வல்லிபுரம், இணைக் காரியதரிசிகள் திருவாளர்கள் இ வல்லிபுரம், சி சுந்தரலிங்கம் தனதிகாரி திரு. ஆ. பொன்னம்பலம், கோவில் நடைமுறைப் பொறுப்பாளர் திரு. வைவேலாயுதம்பிள்ளை, நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 12—2—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை,7-45 திரைகானம், 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்

344 மீ அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலி பரப்பு, 5-00 பிறந்தநின வாழ்த்துக்கள், 5-30 நிலையஒலிப்பதிவுகள்.


இரவு 6-15 மெல்லிசை, 7-00 ஞானமஞ்சரி, 7-15 வீணைஇசை, 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு.


கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY நீர்ப்பாசன பம்புகள்

★ மணிக்கு 10,000 கலன்
★ குறைந்த இயக்கச் செலவு
★ பராமரிப்புச் சுலபம்



2" பெற்றேல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன, மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்றேல்/ மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இன்டஸ்ட்ரீஸ் தயாரிப்பு

பக்கபலமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்.

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல: 37/39, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:

திரு. ஏ. சி. ஜோசெப் (மனேஜர்)

தொலைபேசி- 7031

நாணயக் கட்டுப்பாட்டை

# மீறினல் இரண்டு வருடச் சிறை?

கோட்டை, வியாழன்

அந்திய நாடுகளில் வைத்திருக்கும் ஆதனங்கள் பற்றிய தகவல்களை இதுவரையும் அரசாங்கத்துக்கு தெரிவிக்காதவர்களுக்கு வெளிநாட்டு மன்னிப்பு மசோதாவில் மேலும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த மசோதாவின்படி வெளி நாடுகளிலுள்ள இலங்கையருக்குச் சொந்தமான அசைவுள்ள அசைவற்ற ஆதனங்கள் தங்கம் போன்றவற்றைப் பற்றிய தகவல்களை இலங்கை அரசாங்கத்திற்குத் தெரிவிப்பதற்கு இன்னமும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நாணயக்கட்டுப்பாட்டை மீறிய இலங்கையர்களுக்கு மார்ச்மாதம் வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரையும் கணக்குக் காட்டாத ஒரு நபர் அந்நியநாடுகளிலுள்ள தனது ஆதனம் பற்றிய தகவல்களை எழுத்துமூலம் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கவேண்டும். இதற்கான படிவங்களை வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படும் சகல தகவல்களும் அந்தரங்கமாக வைக்கப்படுமென நிதி அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுபற்றிய திருத்த மசோதா வொன்றை நிதி அமைச்சர் ஆட்சி மன்றத்தில் மிக விரைவில் சமர்ப்பிக்கவிருக்கிறார். இத் திருத்தச் சட்டத்தின்படி வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாட்டை மீறியவர்களுக்கு 2 வருட சிறைத் தண்டனை அளிக்கப்படவும் இலங்கையில் உடமைகளைப் பறிமுதல் செய்யவும் முடியுமெனச் சொல்லப்படுகிறது.

## 'ஊழல்களை ஒழித்துக்கட்ட மக்களும் முன்வரவேண்டும்'

பருத்தித்துறை, வியா

'இன்றைய சமுதாயத்தில் நிலவும் கள்ளமார்க்கட் கைலஞ்சம் போன்ற ஊழல்களை அரசாங்கம் ஒழித்துக்கட்ட முன்வரும் காலகட்டத்தில் பொதுமக்கள் அப்புனித பணிக்குஒத்துழைப்பு வழங்காவிடில் சமுதாயநல் வாழ்வுக்கு முட்டுக்கட்டையிட்டவர்களாவார்கள். விஷம்போல வாழ்க்கைச் செலவு ஏறுவதை ஓரளவாவது தடுக்க வேண்டுமாயின் பொதுமக்கள் கள்ளமார்க்கட்காரரைக் காட்டிக்கொடுக்க முன்வர வேண்டும்'

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற வாலிபர்சங்கக் கூட்டமொன்றில் பேசிய திரு பொன் குமாரசாமி கூறினர் தும்பளையில் பருத்தித்துறை நகரசபை உபதலைவர் திரு கே சேனுதிராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு குமாரசாமி பிற நாடுகளில் பொதுவாழ்வில் நிலவும் ஒழுக்க நெறிகளைச் சுட்டிக்காட்டியதுடன் கள்ளமார்க்கட்காரரைப் பெரிய மனிதராக மதிக்கும் கோழைமனப்பான்மை ஒழியவேண்டும் என்றும் கூறினர்.

——

### ஒரு வாரத்துள் ஒருபுதிய கட்டிடம்

பருத்தித்துறை, வியா

புலோலி இந்துக்கல்லூரியில் அண்மையில் ஏற்பட்ட இடநெருக்கடி காரணமாக இப்பகுதியைச் சேர்ந்த பெற்றோர் உதவிய நிதியைக்கொண்டு ஒருவார காலத்துள் ஒரு புதிய கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது

பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு சுலைரத்தினமும் உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு க ஜெயக்கொடியும் முன்னின்று உழைத்த காரணத்தால் பலர் சிரமதானப் பணியில் ஈடுபட்டு மும்முரமாக வேலையை முடிக்க உதவினர்.

இப் புதிய கட்டிடம் அநேகமாக இம் மாத முடிவுக்குள் வடமாநிலக் கல்விபணிப்பதி திரு டபிள்யூ டி. சி. மகாதந்திலாவால் திறக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது. இதைத் தொடர்ந்து மேலும் சில கட்டிட விஸ்தரிப்பு வேலைகளை பெற்றோர் மேற்கொள்ளலாமெனவும் அறியக்கிடக்கிறது.

### எம். பி. முறையீடு

வேலணை, வியா

வருமான மதிப்பீடுகள் தனிச் சிங்களத்திலேயே னுப்பப்பட்டிருப்பதுபற்றி உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளருடன் திரு ஆணையாளருடன் எம் பி தொடர்புகொண்டுள்ளார்.

அஞ்சல் தொலைத்தொடர்பு அமைச்சின் கீழுள்ள அஞ்சல் தொடர்பு திணைக்களத்தின் கடித இதழின் தலையங்க விபரம் முன்பு தமிழிலும் இடம்பெற்றது. இப்பொழுது தமிழ் புறக்கணிக்கப்பட்டிருப்பது வருத்தத்திற்கும் வேதனைக்கும் இடமளிக்கிறது என அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சருக்கு எம் பி தெரிவித்துள்ளார்.

——

### குடிநீர்த்திட்டம் விரைவில் இயங்கும்

பருத்தித்துறை வியா.

''கரவெட்டி குடிநீர்த் திட்டத்திற்கு எனது முயற்சியால் ரூபா 1 1/2 லட்சம் ஒதுக்கியுள்ளேன். நெல்லியடிப் பட்டினசபை அதைக் கையேற்பதற்குக் காலம் தேவைப்படுவதாகக் கூறியுள்ளது பட்டினசபை கையேற்றதும் கரவெட்டிப் பகுதியில் வாழும் ஆயிரக்கணக்கான மக்களுக்குக் குடிநீர் கிடைக்கும்''

இவ்வாறு கட்டைவேலி சனசமூகநிலைய ஆண்டுவிழாவிற் பிரதம அதிதியாகக் கலந்துரையாற்றிய உடுப்பிட்டி எம். பி. திரு க. ஜெயக்கொடி கூறினர். திரு வே. முத்தையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

''இரு ஆண்டுகளுக்கு முன் 512 கிராமங்களுக்கு மின்சாரவசதி செய்துகொடுப்பதாக அன்றைய அரசாங்கம் திட்டமிட்டது. அக்கிராமங்களுக்கு மின்சார வசதி வழங்கிய பின்னரே இதர கிராமங்களுக்கும் மின்வசதி கிடைக்கும்''

நெல்லியடி பட்டினசபை உறுப்பினர் நியாயவாதி திரு எஸ் செல்லையாவும் உரையாற்றினர்.

## இன்றைய பலன்

தை மாதம் 30-ந் திகதி (12-2-71)

மேஷம்- கடமையாற்றுமிடத்தில் உற்சாகமான சம்பவங்கள் நடைபெறும் சிலருக்குப் பதவிஉயர்வும் கிடைக்கலாம்.

ரிஷபம்- கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள். கல்வித்துறையில் வித்துவத் தன்மை தென்படும்.

மிதுனம்- உஷ்ணத்தின் தாக்குதல் உடலைப் பாதிக்கும். நயனரோகத்திற்கு இடமளியாது நடந்து கொள்ளவும்.

கடகம்- பொன்னான சந்தர்ப்பமொன்று கிடைக்கும். திறமைக்கு முதலிடமுண்டு. பெரியவர்களின் ஆதரவும் கிடைக்கும்.

சிம்மம்- வருமான நிலை திருப்திகரமான நிலை தென்படும்- புதிய முயற்சிகளிலும் ஈடுபடுவதற்கு விரும்புவீர்கள்.

கன்னி- இதயம் எளிமையாகும். எதிரிகள் தாக்குவர் ஏமாற்றத்திற்கு இடமுண்டு. புதிய நண்பர்கள் சேருவார்கள்.

துலாம்- எதையும் ஏற்று நடத்தக்கூடிய மனத்திடம் ஏற்படும். குடும்பத்தில் தலைமைஸ்தானம் கிடைக்கும்.

விருச்சிகம்- இலட்சியக் கனவு இன்று கானல்நீராகலாம். பின்னணியில் பிளவுக்கு இடமேற்படும். அடக்கம் விரும்பத்தக்கது.

தனுசு- இலட்சியப்பாதையில் நடைபோடுவீர்கள் எடுத்த முயற்சியில் முன்னேற்றம் தென்படும். மதிப்பில் உயர்வுமுண்டு

மகரம்- புதிய கண்டுபிடிப்புகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். விஞ்ஞானத் துறையில் ஈடுபடுவர்கள் உயர்ந்தஅந்தஸ்தும் கிடைக்கும்.

கும்பம்- பொருள்வரவு திருப்திகரமாக இருக்கும். புத்திரவழியால் புகழும் கிடைக்கும். வியாபாரத்துறையில் வெற்றி கிடைக்கும்.

மீனம்- சிந்தனைகளின் தாக்குதல் உங்கள் உடல் நிலையைப் பாதிக்கும். மனதில் அமைதி குன்றும். பொறுமையைப் பேணி நடக்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

### வெற்றிக் கிண்ண போட்டி

பாண்டிருப்பு, வியா

கல்முனை விளையாட்டு ரசிகர் சங்கத்தினல் ஒழுங்கு செய்யப்பட்ட 1970-ம் ஆண்டு வழக்கறிஞர் காதர் முகைதீன வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டசுற்றுப் போட்டியின் இறுதி விளையாட்டு கல்முனை உவெஸ்லி விளையாட்டுத் திடலில் ஹஜ்ஜுப் பெருநாளன்று நடைபெற்றது.

கல்முனை பஜார் 'ஏ' கோஷ்டியும் கல்முனை குவாண்டாஸ் கோஷ்டியும் மோதிக்கொண்ட இப்போட்டியில் பஜார் 'ஏ' கோஷ்டி 3—2 கோல்களால் வெற்றிபெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

கல்முனை நாடாளுமன்றப் பிரதிநிதியும் பட்டினசபை தலைவருமாகிய ஜனுப் எம் சி. அகமது உதைபந்தாட்ட நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினர். வெற்றிபெற்ற கோஷ்டியினருக்கு மாவட்ட நீதிபதி திரு ரீ என் அபயவீராவின் பாரியார் வெற்றிக் கிண்ணத்தைவழங்கினர்.

## கணவனின் சடலத்தை ஏற்க மறுத்தார் மனைவி

மாவிட்டபுரம், வெள்ளி

வீதியால் வாகனத்தில் சென்று கொண்டிருந்த ஒருவர் திடீரென ஏற்பட்ட மாரடைப்பினல் மரணமடைந்தார். அவரது சடலத்தை அவரது மனைவி ஏற்க மறுத்தார். நல்லூரில் இச் சம்பவம் நடந்தது.

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த வி. பி. ஜெயசூரியா என்பவர் அளவெட்டிக்குசென்று விட்டுத் திரும்பிச் செல்லும் வழியில் மருதனுமடம் சந்திக்கு அருகில் நெஞ்சில் நோ ஏற்படுவதாகக் கூறியதையடுத்து உடனடியாக அவர் ஆஸ்பத்திக்கு எடுத்துச் செல்லப்பட்டதும் மரணமானர் இவரின் மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு இ பாலசுப்பிரமணியம் விசாரணை நடாத்திய போது பிரஸ்தாபநபர் தமது மனைவி இராசலட்சுமியுடன் மோதமாகக் கோபித்துக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை மாவட்ட அதிகாரி டாக்டர் ஐ பேரின்பநாயகம் பிரேதபரிசோதனை நடாத்தினர். மரணவிசாரணை அதிகாரி மாரடைப்பால் ஏற்பட்டமரணம் எனத் தீர்ப்பளித்தார்.

இச்சடலத்தை ஏற்க மனைவி மறுத்ததால் இவரின் தம்பியார் சடலத்தை பெற்றுச்சென்றார்.

கட்டிடக்கலையில்

## தனியார் துறையினரின் உதவி பெற அமைச்சுமுடிவு

கோட்டை, வியாழன்

கட்டிட வீடமைப்பு அமைச்சு வெளிநாட்டுக் கட்டிடக் கலைஞர்களின் உதவியை இனிமேல் நாடமாட்டாது. தேவை ஏற்படும்போது உள்நாட்டு தனியார் துறையினரின் உதவியை அமைச்சு பெற்றுக்கொள்ளும்.

1969ம் ஆண்டு இரண்டு வெளிநாட்டுக் கட்டிடக் கலைஞர்களை, வீடமைப்பு கட்டிட அமைச்சு ஒப்பந்தம் செய்திருந்தது. இவர்களுக்கு வருடாந்த சம்பளம் 40,500 ரூபா என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதை இப்போது அமைச்சு நிறுத்திவைக்க தீர்மானித்துள்ளதாகத்தெரிகிறது

கட்டிட வீடமைப்பு அமைச்சு வெளிநாட்டு கட்டிடக் கலைஞர்கள் உதவியை பெறுவதில்லை எனவும், தேவை ஏற்படும்போது இந் நாட்டில் தனியார்துறையில் கடமையாற்றும் கட்டிடக் கலைஞர்களின் சேவையைப் பகுதி நேரமாகப்பெறுவது எனவும்முடிவுசெய்துள்ளது. இந்தமாத முடிவுக்குள் கட்டிட இலாகா புதிய முறையில் மாற்றிஅமைக்கப்படும் இதன்பின்பு முக்கிய கட்டிட வேலைகளை கட்டிட இலாகா பொறுப்பேற்று நடாத்தும்.

சுகாதார சம்பந்தமான கட்டிட வேலைகள் அனைத்தும் பிரதான பொதுச்சுகாதார பொறியியல் பிரிவினர் பொறுப்பேற்று நடாத்துவார்கள் என தெரியவந்துள்ளது.

பொறியியல் மற்றும் கட்டிடக்கலை சம்பந்தமான வேலைகளை தேசிய வீடமைப்புக் கமிஷனர் பொறுப்பேற்று நடாத்துவார். பாடசாலை சம்பந்தமான கட்டிடங்களும் குறித்த தொகைக்குமேல்உள்ள கட்டிடங்களை பொறுப்பேற்று நடாத்தும் எனதெரியவந்துள்ளது.

## இளம் விவசாயிகள் கழக வானெலி அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

இளம் விவசாயிகள் கழக வானொலி அறிவுப்போட்டியின் ஆரம்ப தெரிவுப் போட்டி இவ்வாண்டு பெப்ரவரி மாதத்திலும் இறுதிப் போட்டி மார்ச்மாதத்திலும் நடைபெறும். பதிவுசெய்யப்பட்ட கழக அங்கத்தவர்களே (வயது 14—25) போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர் போட்டியில் கலந்துகொள்ளவிரும்பும் கழக அங்கத்தவர்கள் விண்ணப்பங்களை தமது பகுதி விவசாய விரிவாக்க சேவையாளருக்கு உடனடியாக விண்ணப்பிக்கும்படி யாழ் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு. பொ. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார்.

விவசாய போதனசிரியர் பகுதி ரீதியிலான போட்டிகள் நடைபெறும் திகதிகள் வருமாறு: பெப்ரவரி 20ந் திகதி. காலை வலிகாமம் கிழக்கு, மாலை வடமராட்சி. 21ந் திகதி காலை தீவுப்பகுதி மாலை யாழ்ப்பாணம், 22ந் திகதி காலை வலிகாமம் மேற்கு. மாலை வலிகாமம் வடக்கு. 25 திகதி காலை தென்மராட்சி மாலை பளை 26ந் திகதி கரைச்சி வடக்கு மேற்கு விஷேடதிட்டம். 27ந் திகதி பூநகரி, 28ந் திகதி துணுக்காய்.

விவசாய விரிவாக்க நிலையங்களுக்கிடையிலான போட்டி மார்ச் 1ம், 2ம் திகதிகளில் யாழ்ப்பாணம் விவசாய கிசாலிப்பு நிலையத்தில் நடைபெறும்.

(அம். நிரு.)

### இடமாற்றம்

பச்சிலைப்பள்ளி. வெள்ளி

முள்ளிப்பற்றுக் கிராம சபை எழுதுவினைஞராகப் பணியாற்றிய திரு வ. பெரியதம்பி 1-2-1971 தொடக்கம் புத்தூர்க்கிராம சபைக்கும் புத்தூர்க் கிராம சபையிலிருந்து திரு. பொ. மகாலிங்கம் முள்ளிப்பற்றுக் கிராம சபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் உதவிஆசிரியராகக் கடமையாற்றிய திரு கா அருளானந்தம் வெள்ளமடை தமிழ் மகாவித்தியாலயத்துக்கும் வெற்றிலைக்கேணி றோ.க. பாடசாலையின் உதவி ஆங்கில ஆசிரியர் திரு ஆ. தம்பையா கட்டைக்காடு றோ. க. த. க. பாடசாலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

——

### அனுதாபம்

உடுவில் வியா

மானிப்பாய் மெமோரியல் மகா வித்தியாலய முன்னைநாள் அதிபர் திரு றிச்சேட் சின்னத்தம்பிசெல்லையாவின் திடீர் மரணம் குறித்து அனுதாபம் தெரிவிக்கும் வகையில் மேற்படி கல்லூரி ஒரு நேரமாகமூடப்பட்டது.

அன்னரின் ஆன்மா சாந்தியடைவதற்காக கல்லூரியில் இரு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. ஆசிரியர்கள் மாணவர்கள் மரணச் சடங்கிலும் கலந்து கொண்டனர்.

# பனம்பொருள் அபிவிருத்திக்கு மரவரியை நீக்க வேண்டும்

## விசாரணை குழு முன் காந்தி சேவா சங்கம் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இந் நாட்டில் பனம் பொருள் உற்பத்தியை முன்னேறச் செய்ய வேண்டுமானால் உடனடியாக வடபகுதியிலுள்ள மரவரி முறையை நீக்க வேண்டும். இந்த மரவரி முறை தொழிலாளரையும் மக்களையும் வேறுதிசைக்கு இழுத்துச் செல்லுகிறது. மது ஒழிப்புத்தான் இந்தியாவில் பனம் பொருள் அபிவிருத்திக்கு உதவியாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் நேற்று இரண்டாவது தினமாக நடந்த பனம் பொருள் ஆராய்ச்சி விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த காந்தி சேவா சங்க தூதுக்குழு மேற்கண்டவாறு தெரிவித்தது.

காந்திசேவா சங்கத் தலைவர் திரு இ க வேலாயுத பிள்ளை தலைமையில் வந்திருந்த இக்கோஷ்டியில் திரு இ கந்தையா பண்டிதர் துரைசிங்கம், திரு க கனகராசா ஆகியோர் அங்கம் வகித்தனர்.

திரு வேலாயுத பிள்ளை, பனை ஓலையினால் தயாரிக்கப் பட்ட ஒரு திருமண அழைப்பை விசாரணைக்குழுவிடம் சமர்ப்பித்து இதே போன்ற நவீன அழைப்பிதழ்களை மலிவாக உற்பத்தி செய்யலாம் என்றும் கூறினர்.

திரு வேலாயுத பிள்ளை மேலும் கூறியதாவது மதுவிலக்கின் மூலம் தான் பனம் பொருள் உற்பத்தியை அபிவிருத்தி செய்யலாம் மதுவிலக்கினை தளர்த்துகிறமா பாவம் நான் புரியேன், நிதி இழப்புப் பெரிதல்ல மக்கள் நிம்மதியே பெரிது என்று அறிஞர் அண்ணா கூறியிருக்கிறார். அதுமட்டுமல்ல மதுவிலக்கின் பயனை உணராதோரை குமரபுரத்திற்கு கூட்டிவர வேண்டும் என ம பொ சி கூறியுள்ளார்.

(5-ம் பக்கம் பார்க்க)

### பழச்செய்கைக்கு அரசாங்க உதவி

கோட்டை, வெள்ளி

பழமரச் செய்கையை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல அமைச்சுக்கள் முன்னின்று பழச் செய்கையை ஊக்குவிக்க உள்ளன. திட்ட பொருளாதார அமைச்சு, விவசாயக் காணி அமைச்சு, வர்த்தக அமைச்சு ஆகியன பழச்செய்கை, தரத்தில் அடைத்தல், சந்தைப் படுத்தல் ஆகியனவற்றிற்கு உதவும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

பழச்செய்கை பற்றிய நடவடிக்கைகளை ஊக்குவிக்க விசேட சபை ஒன்று இயங்கும். பழச் செய்கை விசேட சபை குறிப்பிடும் பழவகை உற்பத்தி செய்வோருக்கு அரசாங்கம் பண உதவி செய்யும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

### திறப்புவிழா

இமையாணன், வெள்ளி

வடமராட்சிக் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் படுத்திக்துறை மருந்துச் சாலைத் திறப்புவிழா இன்று நடைபெறுகிறது.

இதனை நகரசபைத் தலைவர் திரு. வ தருமலிங்கம் திறந்துவைப்பார்.

குருவானவர் கடத்தப்பட்டார்?

## கந்தானை பகுதியில் பதட்ட நிலைமை

கோட்டை, வியாழன்

கந்தானைப் பகுதியில் கத்தோலிக்க தேவாலய மொன்றின் குருவானவர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து அப் பகுதியில் பதட்டமான நிலைமை இருந்து வருகிறது

கந்தானைப் பொலிஸ் பகுதியில் நேற்று கலவரமேற்படக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியது வீட்டுக்குத் தீ வைத்ததாகக் கூறப்படும் சந்தேக நபர்கள் நேற்றுப் பொலிசில் சரணடைந்தனர். நேற்றுமாலை ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூட்டமொன்று கந்தானைப் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டது. நிலைமையைச் சமாளிக்க கொழும்பிலிருந்து விசேட பொலிஸ் கோஷ்டியொன்றை வரவழைக்க வேண்டியிருந்தது.

### இராணுவ வீரர் கொலை வழக்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

மன்னார் தாழ்வுப்பாடு இரட்டைக் கொலைவழக்கை கொழும்பு சுப்பிறீம்கோர்ட்டில் விசாரணைசெய்வதற்கு அட்டோர்ணி ஜெனரல் உத்தரவிட்டுள்ளார்

இவ்வழக்கில் தாழ்வுப்பாடு என்ற கிராமத்தில் 2 இராணுவ வீரர்களைக் கொலை செய்ததாக அதே கிராமத்தைச் சேர்ந்த 8 பேர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது

இவ்வழக்கு கீழ்க் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டு முடிவில் சுப்பிறீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டிருந்தது

## யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் பேட்டை

கோட்டை, வியாழன்

யாழ்ப்பாணப் பகுதியில் வெகு விரைவில் பல புதிய கைத்தொழில்கள் நிறுவப் படவுள்ளன. யாழ்ப்பாணப் பகுதியின் கைத்தொழிலை விருத்தி செய்யுமுகமாக கைத்தொழில் பேட்டை ஒன்று நிறுவப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இங்கு விருத்தி செய்யக்கூடிய சில குறிப்பிட்ட கைத்தொழில்கள் பற்றிக் குழுவொன்று ஆராய்ந்து கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

### ஆய்வுக்குழு

கோட்டை, வியாழன்

உடவளவை ஆற்றுப் பளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் ஒழுங்கீன ஊழல்கள் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட செயற்குழு தனது ஆய்வை எம்பிலிப்பிட்டியாவில் விரைவில் ஆரம்பிக்கவிருக்கிறது.

5 பேர் கொண்ட இக்குழுவை நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயகா நியமித்துள்ளார்

……

வேலணை, வியாழன்

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பில் மேசன் பயிற்சி நிலையமொன்றை நிறுவித் தருமாறு தொழில் அமைச்சர் திரு. ஸ்ரீவர்த்தனவை திரு. கா பொ இரத்தினம் எம். பி. கேட்டுள்ளார்.

## தமிழரசு எம். பிக்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்.

பனம்பொருள் ஆராய்ச்சி குழு விசாரணை சம்பந்தமாக வடபகுதியைச் சேர்ந்த சகல எம். பிக்களுக்கும் ஒரேவிதமான அழைப்பு அனுப்பப்பட்டதாக விசாரணை குழுத் தலைவர் திரு வி சிவசுப்பிரமணியம் நேற்று நமது நிருபரிடம் தெரிவித்தார்.

திரு சிவசுப்பிரமணியம் மேலும் கூறியதாவது:-

அரசாங்க அதிபருடன் இவ்விஷயமாக தான் தொடர்பு கொண்ட போது தமிழரசு எம் பிக்களும் அழைப்பு அனுப்பியதாக அவர் தெரிவித்தார்.

பனம் பொருள் ஆராய்ச்சி விஷயத்தில் தங்களுக்கு சிரத்தையிருந்தால் வாய்மொழிச்சான்று பகருமாறு சகல எம் பிக்களுக்கும் 28-1-71 ல் அழைப்பு அனுப்பப்பட்டதாக அரசாங்க அதிபர் எனக்கு கூறினர்.

இன்று குழுச்செயலாளர் இவ்விஷயமாக தமிழரசு கட்சி எம் பிக்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அழைப்பு விடுத்தார் அப்பொழுது ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் 12-ம் தேதி தமிழரசும்ள பிக்கள் வேறுவிஷயமாக சந்திப்பதாகவும் அப்பொழுது இவ்விஷயமாக ஆலோசித்தால் 15-ம் தேதிக்கு முன் விசாரணை குழுவின் முன் சாட்சியமளிப்பதாகவும் தெரிவித்தார்

வடபகுதியை சேர்ந்த சகல எம் பிக்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது தமிழ்க்காங்கிரஸ் எம் பிக்களும் நியமன எம் பியுமே இங்கு சாட்சியமளித்தனர்

### அரசாங்க அதிபர் மறுப்பு

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பனம் பொருள் ஆராய்ச்சிக் குழு முன் சாட்சியமளிக்குமாறு தமிழரசுக்கட்சி எம் பிக்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டதாகவும் ஆனால் தமிழரசு எம் பிக்கள் எவரும் இதில் கலந்து கொள்ளவில்லை என்றும் அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா நேற்றுத் தெரிவித்தார்

தமிழரசு எம் பிக்களுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்று ஈழநாட்டில் வெளியான செய்தி தவறு என்றும் அரசாங்க அதிபர் கூறினர்.

……

### நிரந்தர கிராமசேவகர் வேண்டுமாம்

வேலணை, வியா

எழுவைதீவுக்கு நிரந்தர கிராமசேவகர் நியமிக்கப் படவில்லை. பொலிஸ்சேவை இல்லாத இடமாக இருப்பதால் இப்பகுதி மக்களின் வசதிக்காக நிரந்தர கிராம சேவகரை நியமிக்க உடனே நடவடிக்கை எடுக்கும்படி ஊர்காவற்றுறைத் தொகுதி எம். பி திரு. கா, பொ. இரத்தினம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர் டயஸ் பண்டாரநாயக்காவைக் கேட்டுள்ளார்.

… …

### வெங்காய விலையில் மாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வெங்காய விலைகளில் மாற்றம் செய்யப்படவிருக்கிறது தென்றும் வெங்காய விலைகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மந்திரி' ஹெறாப்பேகடுவா எடுத்து வருவதாகவும் தபால்அமைச்சர் திரு, செ. குமாரசூரியர் தெரிவித்துள்ளார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வென் கோயில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## முஸ்லீம் இனம் ஒத்துழைப்பதால் அதிக சலுகையைப் பெறமுடிகிறது

— வ. பொன்னம்பலம்

உடுவில், வெள்ளி

"தமிழ் இனம் பெறும் உரிமைகள் சலுகைகள் போன்றவற்றிலும் பார்க்க கூடிய உரிமைகளையும் சலுகைகளையும் முஸ்லிம் இனம் இந்நாட்டில் பெறும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது அவர்கள் ஆளும் இனத்துடன் ஒன்றுபட்டு உழைக்க தீர்மானித்து விட்டதே இதற்குக் காரணம் தமிழினம் பிரிவு மனப்பான்மை கொண்டு ஒற்றயாட்சியை விரும்பாத காரணத்தால் இன்னும் அல்லற் படப்போகின்றது. மனிதாபிமானமுள்ள சிங்கள இனத்துடன் நாம் சேர்ந்து நிற்பதால் தமிழினத்தின் முழுஉரிமைகளையும் பெறமுடியாது விடினும் ஒரு சிலவற்றையாவது பெறக்கூடியவாய்ப்பை ஏற்படுத்தியுள்ளோம் கொழும்பில் உள்ளபல்கலைக் கழகத்தின் மூடப்பட்ட கலைப்பிரிவை மீண்டும் ஆரம்பிக்கவும், வடக்கில் புதிய ஒரு பல்கலைக்கழகம் அமையவும் வழிவகை செய்துள்ளோம். ஒரு சோஷலிச அமைப்பில் தான் இவற்றை செய்யமுடியும்."

'சோஷலிசம் ஏன்' என்ற கருத்தரங்கத்தில் பேசிய கம்யூனிஸ்ட் கட்சி வடபகுதி அமைப்பாளர் திருவ பொன்னம்பலம் இவ்வாறு கூறினார்

கந்தரோடை சுப்பிரமணியம் வாசிகசாலையில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு திரு. கந்தையா தலைமை வகித்தார். திரு. வி. பொன்னம்பலம் மேலும் பேசியதாவது:

வாழ்க்கை வசதிகள் உணவு உடை. வருமானம் போன்ற அடிப்படை உரிமைகள் சகல மக்களுக்கும் சமத்துவமாக்கப்பட வேண்டும். தொழில் வசதிகள் பெற்று, நாட்டு அரசியல் அமைப்பில் மக்கள் அதிகாரம் பெறுதல் வேண்டும் வாழ்க்கைவசதிகள் ஒரு சிலருக்கு என்றில்லாமல் சாதாரண ஏழைகளும் அனுபவிக்கச் செய்ய வேண்டும் இதற்குத்தான் தேவையானது சோஷலிசம்

தேசீய செல்வத்தை சகலரும் பகிர்ந்து வாழ்ந்தால் நாட்டில் வறுமை ஒழியும் உடம்பில் இரத்தம் எங்கும் பரவலாக்கப்பட்டால் எப்படி சுகமாக வாழமுடியுமோ அதேபோல செல்வத்தை சகல மக்களும் பகிர்ந்து கொண்டால் நல்ல வாழ்க்கை ஏற்படும் சகல மக்களுக்கும் சமசந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதே சோஷலிசம் வறுமையை போக்கி மக்களை வாழவைக்கும் சோஷலிசம் அமைய வேண்டுமானால் தேசிய செல்வம் யாவும் அரசாங்கத்தை அடையச் செய்யவேண்டும் ஏற்றுமதி இறக்குமதிகள் யாவும் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

வங்கிகள் வர்த்தக நிறுவனங்களை தேசீய மயமாக்கி தேசிய செல்வத்தை அரசாங்கம் தனதாக்கினால் அல்லாமல் இந்நாட்டில் சோஷலிசத்தை ஏற்படுத்த முடியாது.